




# ஞானச்சுடர்

## மலர்

கார்த்திகை 1999




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் வழி

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்
விழுமந் துடைத்தவர் நட்பு." [ கண்

பொருள் :-

துன்பத்தில் உதவியவர்களின் நட்பை ஏழு பிறப்பிலும் பெரியோர் மறக்க மாட்டார்கள்.

ஸ்ரீ

அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

101 ) அம்பு வில்லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாக் கரைத்தரு ளருணாசலா (அ)

102 ) அருணையென் றெண்ணயா னருட்கண்ணில் பட்டேனுன்
னருள்வலை தப்புமோ வருணாசலா (அ)

103 ) சிந்தித் தருட்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை யருணாசலா (அ)

104 ) அன்பொடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவரு ளருணாசலா (அ)

105 ) என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யென்நாளும் வாழ்ந்தரு ளருணாசலா (அ)

106 ) என்புரு கன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவரு ளருணாசலா (அ)

107 ) பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தரு ளிஷ்டம்பின் னருணாசலா (அ)

108 ) மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தரு ளருணாசலா (அ)

( முற்றிற்று )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 23

1 9 9 9 கார்த்திகை

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 4 |
| 2) | அழகு பற்றிய ஒரு கண்ணோட்டம் | 5 - 7 |
| 3) | பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஷர் | 8 - 9 |
| 4) | திருஞானசம்பந்தர் தேவாரம் இயற்கைப் ...... | 10 - 12 |
| 5) | தன்னை அறிந்தபின் அறிவதற்கு........ | 13 - 16 |
| 6) | சந்நிதியான் தெய்வீக நினைவுப் பாமாலை | - 17 |
| 7) | திருக்கேதீஸ்வரம் சபாரத்தின சுவாமிகள் | 18 - 21 |
| 8) | சந்நிதியான் | 22 - 24 |
| 9) | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் | 25 - 26 |
| 10) | நஞ்சணி கண்டன் எந்தை | 27 - 28 |
| 11) | ஞானச்சுடர் வாசகர்களிடையிலான போட்டி...... | 29 - 32 |
| 12) | வாசகர் வழங்கும் வாசகம் | 33 - 35 |
| 13) | விபூதியின் மகத்துவம் | 36 - 37 |
| 14) | விரதத்தின் மகிமை | - 38 |
| 15) | திருநாவுக்கரசர் கூறும் ஐந்து உண்மைகள் | 39 - 40 |
| | மாணவர் பக்கம் | |
| 16) | குரு வழிபாடு | 41 - 43 |
| 17) | Easy Way to Learn English(Part—22) | - 44 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/— ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# செல்வச் சந்நிதி

பல்லவி

செல்வச் சந்நிதியான் செல்வமெலாந் தருவான்
சிந்தை குளிரவே வந்தனை செய்யவே
— செல்வச் சந்நிதியான்

அநுபல்லவி

ஆற்றங் கரைதனில் அழகுடன் வீற்றிருக்கும்
தோற்றப் பொலிவுகண்டு தொல்லையுமே வினையெலாம்
— செல்வச் சந்நிதியான்

சரணம்

போற்றி வணங்கிடப் பொழுதெல்லாம் நினைந்திட
ஆற்றலுடைய வடிவேல் அகத்தினில் இடமாக
வீற்றிருப்பான் எம்முன்னே விரும்பியே சந்நிதியான்
தோற்றதில்லை நாங்கள் கேட்டதெல்லாம் தருவான்!
— செல்வச் சந்நிதியான்

ஆறும் அறுகாட்டு ஆனைமட்டும் உணர்ந்திக்
குருவாய் உபதேசித்துக் கொண்டருள்வான் எங்களுக்கு
அமைதி, சமாதானம், அரசம் தந்திடுவான்
நிலையான செல்வமாய் நித்தமும் அனுபவிக்க
— செல்வச் சந்நிதியான்

பாழும் மனிதர்கள் பக்குவமாய்க் கேளாவிடில்
சூழும் வினைகளெல்லாம் சூழ்ந்திடுமே அவர்களுக்கு
ஆறும் பிரமனையும் அடக்கிச் சிறையிலிட்டுச்
சூரனையும் சங்கரித்தான் சுகம்தருவான் அன்பருக்கு
— செல்வச் சந்நிதியான்

சுபம்

சுலோசனா ஜெயதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
## ஐப்பசி மாத வெளியீடு

அறிமுகவுரை:-

இந்த மலருக்கான அறிமுகவுரையை வல்வெட்டித்துறை கிராம சேவையாளர் திரு. சி. செபாலசிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்னதானச் செயற்பாடுகளும் பேரவையினுடைய செயற்பாடுகளும் நீண்ட காலம் விளங்கிக்கொண்டிருப்பதாகவும் அளவற்ற இவர்களது பணி எமது சமுதாயத்திற் பல வகைகளிற் பயன்படுவது பற்றியும் எடுத்துக் கூறினார்கள். அந்தப்பணிகளில் ஞானச்சுடர் வெளியீடு மிகுந்த பயனுடையதாக இருப்பதையிட்டுத் தமது மகிழ்ச்சியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மதிப்பீட்டுரை:-

மதிப்புரையைச் சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள் மேற்கொண்டார்கள். ஞானச்சுடரின் முதல்வெளியீட்டின் பொழுதும் தான் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றியும், இதனை வர்த்தக நோக்கமின்றித் தொண்டாக மேற்கொண்டு வருவது சைவமக்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியது எனவும் குறிப்பிட்டார்கள்.

மாவட்டத்தில் மட்டும் உள்ளவர்கள் பயனடைந்த இம்மலர் திருகோணமலை, வவுனியா, கொழும்பு என்று விரிவடைந்து இன்று லண்டன், கனடா ஆகிய இடங்களிலுள்ளவர்களும் பயனடையக் கூடியதாகத் தன் ஒளியைப் பரப்பிக்கொண்டிருப்பது பற்றியும் சபையினருக்கு எடுத்துக் கூறினார். சந்நிதியானுடைய திருநெறியைத் தாங்கிச்செல்வது இதனுடைய தனித்துவமாக விளங்குவதையும் சுட்டிக்காட்டினார்.

திரு. ஆறுதிருமுருகன் அவர்கள் ஆத்மீகம் தொடர்பாகத் தனக்குள்ள அறிவின் ஆழத்தினால் சுடரில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையினதும் உட்பொருளை அடியார்களுக்கு பக்திச்சுவையுடன் எடுத்துக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத சிறப்புப்பிரதி பெறுவோர்

திரு. சிவ ஆறுமுகஸ்வாமி, J. P.
( அமைப்பாளர், வடபிராந்திய இந்துப்பேரவை. )

திரு. சி. நவரெத்தினம்
( இளைப்பாறிய ஆசிரியர், கரணவாய் - கிழக்கு. )

திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை
( ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. )

உரிமையாளர்
( தமிழ்ப்பூங்கா அழுத்தகம் )

திரு. ஏ. கிருஷ்ணமூர்த்தி
( ஜோதிபன் அழுத்தகம் )

திரு. ஒ. சிவச்செல்வம்
( அதிபர், விநாயகர் வித்தியாலயம் - வல்வெட்டி. )

திரு. மூ. பொன்னுத்துரை, J. P.
( தலைவர், இளங்கதிர் சனசமூக நிலையம். )

திரு. K. இராமநாதன்
( சத்திரங்கை, கம்பர்மலை. )

திரு. மூ. தர்மலிங்கம்
( சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி. )

செயலாளர்
( வல்லை சனசமூக நிலையம், வல்வெட்டித்துறை. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம
# சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும்
# திருவாசக விழா
# பண்ணிசைப் போட்டி - 1999

மேற்படி பேரவையின் ஆதரவில் **19 - 12 - 1999** ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கும் திருவாசகவிழா தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே வழமைபோல பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் தரம் (1999 இல்), பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றின் விபரங்களை பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி **10 - 12 - 99** ற்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கவும்.

| பிரிவுகள் | விடயம் |
|---|---|
| 1] ஆண்டு 6 — 7 | சிவபுராணம் |
| 2] ஆண்டு 8 — 9 | திருவெம்பாவை "முதற்பத்துப் பாடல்கள்" |
| 3] ஆண்டு 10 — 11 | அற்புதப்பத்து |

நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் பாடிக்காட்டுதல் போதுமானது. அத்துடன் பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களினதும் சமய பாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

சமயபாடம் தொடர்பான பொது அறிவு அச்சிடப்பட்ட வினாத்தாள் வழங்கி எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும். பண்ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெறப்படும்.

போட்டி **12 - 12 - 99** ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு **19-12-99** இல் நிகழும் திருவாசக விழாவில் பணத் தொகையும், பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

திருவாசகப் போட்டிக் குழு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்" சந்தாதாரர்களுக்கு
# அன்பான வேண்டுகோள்!

மேற்படி இதுவரை காலமும் சந்தாப்பணம் செலுத்தாத அன்பர்கள் தங்களது சந்தாப் பணத்தைக் காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

காசுக் கட்டளை:

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.

காசோலை:

செ. மோகனதாஸ்
சேமிப்பு க./இல. 22096
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

அனுப்ப வேண்டிய சந்தாப் பணத்தை அனுப்பிப் புதுவருடத்திற்குரிய சந்தாவை உறுதிப்படுத்தி இப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்குச் சகல சந்தாதாரர்களையும் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:-

2000 ஆம் ஆண்டு மலர் மட்டுப்படுத்தப்பட உள்ளதால் சந்தாதாரர்கள் தங்களது சந்தாவைச் செலுத்தி மலரை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

மேலும் ஆச்சிரமப் பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர் மேலே குறிப்பிட்டவண்ணம் தொடர்பு கொள்ளவும்.

இவ்வண்ணம்
பேரவையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

## பகாசுரன் வதம்

பாண்டவர்கள் சாலிஹோத்ர மகரிஷியின் ஆச்சிரமத்திலிருந்தும் புறப்பட்டு பல நாடுகளையும் கடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது வியாசமகரிஷி இவர்களைத் தேடி இவர்கள் இருக்குமிடத்தை வந்தடைந்தார். பாண்டவர்கள் வியாசரைக் கண்டதும் வணங்கி நின்றனர். அப்போது மகரிஷி அவர்களை நோக்கி " தருமத்தை மட்டும் செய்யும் மானிடர் எவருமில்லை. அவ்வாறே பாவத்தை மட்டும் செய்யும் மனிதரும் உலகில் இல்லை. புண்ணிய பாவங்களை மனிதர்கள் கலந்தே செய்கிறார்கள். இதனால் நன்மையும் தீமையும் கலந்து அநுபவிக்கின்றனர். எனவே துன்பத்தைக் கண்டு துவளாமலும் இன்பத்தைக் கண்டு அதிகளவில் மகிழாமலும் மக்கள் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். உங்களுக்கு பீமன் மூலம் கடோத்கஜன் என்னும் புதல்வன் பிறந்திருப்பதையும் அறிந்தேன். அவனால் உங்களுக்குப் பெரும் நன்மை ஏற்படும். அது மட்டுமன்றி விரைவில் உங்களுக்கு நல்ல காரியங்கள் கைகூடும். பொறுமையாக இருங்கள் " என்று அறிவுரை கூறிச் சென்றார்.

பின்னர் பாண்டவர்கள் குந்திதேவியுடன் அயலில் உள்ள " ஏகச் சக்கரம் " என்னும் கிராமத்தை அடைந்தனர். அங்கே ஓர் அந்தணர் வீட்டில் பிராமண வேடம் பூண்டு தங்கியிருந்தனர். அங்கிருந்துகொண்டு, பாண்டவர்கள் ஐவரும் நாள் தோறும் பிட்சை எடுக்கச் செல்வர். கொண்டு செல்லும் பாத்திரம் நிரம்பியதும் வீடு திரும்புவர். பிட்சைப் பாத்திரங்களைத் தாயாரிடம் கொடுத்து, கிடைத்த உணவில் அரைப்பங்கைப் பீமனுக்குக் கொடுப்பர். மீதி அரைப் பங்கினை ஐவரும் உண்பர். இவ்வாறு பாண்டவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு இருக்கும் நாட்களில் ஒரு நாள் பீமனும் தாயாகிய குந்திதேவியும் வீட்டில் இருக்க வேளை, உட்புறத்தில் வீட்டுச் சொந்தக் காரரான அந்தணரும், மனைவியும், பிள்ளைகளும் கவலைப்பட்டு அழுது

★ கோயில் சிறிதானாலும் தெய்வம் சக்தி வாய்ந்தது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். இரக்க சுபாவமும் உள்ள குந்தி உள்ளே சென்று அவர்களது உரையாடலைக் கவனித்தாள். அப்போது அந்தணர் பின்வருமாறு கூறிக் கொண்டிருந்தார். "குடும்பத்தைப் பாதுகாப்பது குடும்பத் தலைவனின் கடமையல்லவா? நல்லொழுக்கமும், நற்பண்புமுள்ள உன் போன்ற உத்தம மனைவியையும், செல்வச்சிறுமியான என் சிறந்த புத்திரியையும், எனக்குத் தர்ப்பணம் செய்து, என் ஆத்ம சாந்திக்காய்ப் பிதிர்க்கடன் செய்ய உள்ள ஒரேயொரு புதல்வனையும் விட்டுப்பிரிய என்மனம் மறுக்கிறதே! என்செய்வேன்! எனவே நாம் எல்லோரும் ஒன்றாய் இறப்பதே மேல்" என்று கவலையுடன் சொன்னவற்றைக் கேட்ட அந்தணரின் பத்தினியாகிய அப்பெண் பின்வருமாறு கூறலானாள். "கற்றுணர்ந்த தாங்கள் இப்படிக் கலங்கலாமா? மண்ணில் பிறந்தவர் அனைவரும் இறப்பதே உண்மை. மரணத்துக்காக ஒருவர் துன்பப்படலாமா? மனைவியாகிய நான் தக்க சமயத்தில் தங்களுக்கு உதவ வேண்டியவளே. தன் உயிரைக் கொடுத்தேனும், கணவனுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதே தர்மமாகும். எனவே தாங்கள் யான் இறக்கும் போது கவலைப்பட வேண்டியதில்லை. இரு குழந்தைகளையும் நீங்கள் நன்று பராமரித்து வளர்க்க முடியும். ஆனால் தங்களை இழந்தால் நான் தனியே இரு குழந்தைகளையும் வளர்ப்பது கடினம்." எனவே யான் அந்த அரக்கன் இருக்குமிடம் செல்கிறேன். தாங்கள் கவலையை விட்டொழியுங்கள்" என்று கூறலானாள். மனைவி இவ்வாறு கூறியதைக் கேட்டதும் அந்தணரும் குழந்தைகளும் அழுதனர்

இவர்களின் உரையாடல் மூலம் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியாது குந்திதேவி அவர்களை அணுகி "ஏன் இப்படி எல்லோரும் அழுது கவலைப்படுகிறீர்கள். தங்களுக்கு நேரிட்ட துன்பம் யாது? தயவு செய்து விபரத்தைக் கூறுங்கள். உங்கள் துன்பத்தை நாங்கள் போக்க முடியுமாயின், அவ்வாறு முனைவோம்" என்று சொன்னாள். இவற்றைச் செவியுற்ற அந்தணர் "அம்மணி பெருந்தன்மையுடன் தாங்கள் எங்களுக்கு உதவ வருகிறீர்கள். ஆனால் எங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை ஒருவராலும் நீக்கமுடியாது. ஆயினும் தாங்கள் கேட்பதால் அதன் விபரத்தைக் கூறுகிறேன். இந்நகருக்கு வெளியே சிறிது தொலைவில் ஓர் மலைக்குகை உள்ளது. அதில் பகன் என்னும் கொடிய அசுரன் வசித்து வருகிறான். அவன் மனிதர்களைக் கொன்று புசிப்பவன். அவன் அடிக்கடி இந்நகருக்குள் புகுந்து மக்களைக் கொன்று துன்புறுத்தி வருகிறான். இதனால் அந்தணர்களாகிய நாங்கள் அவனுடன் ஓர் உடன் படிக்கை செய்தோம்.

பணப்பார்வைக்கு முகப்பார்வை இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி அசுரனுக்கு வேண்டிய இறைச்சிகள், இதர உணவுப் பதார்த்தங்களும், நாங்கள் அனுப்புவதாக முடிவு செய்தோம். அதன்படி காய்கறிகள், இறைச்சிகள், பானங்கள் தயிர், கள், வீட்டுக்கு ஒரு மனிதன், இரண்டு கறுப்புக்காளைகள், ஆகியவற்றை தவறாமல் அவனுக்கு நாள்தோறும் அனுப்புகிறோம். அவனும் அவற்றை மட்டும் உண்டு, மற்றவர்களை இம்சை செய்யாது, ஊருக்குள் வந்து தொந்தரவு செய்யாமலும் இருக்கிறான். இவ்வாறு நாங்கள் கேட்டதற்கு அவன் உடன்பட்டான். இந்த உடன்பாட்டுக்குப் பின் காட்டு விலங்குகளாலும், மற்றவர்களாலும் துன்பம் ஏற்படாமல் அவன் எங்களைக் காத்து வருகிறான். நாங்கள், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் இருந்து அவனுக்குத் தேவையான உணவு வகைகளும் ஒவ்வொரு மனிதனையும் அனுப்பி வைக்கிறோம். "இன்று எங்கள் வீட்டில் இருந்து உணவு அனுப்பும் நாள். அசுரனுக்கு உணவு கொண்டுசெல்ல ஆள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. மனைவி மக்களைப் பிரியவும் முடியாது. அவர்களில் ஒருவரை அவனுக்கு உணவாக அனுப்பவும் முடியாது நான் தவிக்கிறேன். அதனால்தான், நாங்கள் இவ்வண்ணம் அழுது புலம்புகிறோம்" என்று அந்தணர், குந்தி தேவியிடம் கூறினார்.

இவற்றை எல்லாம் செவிமடுத்த குந்திதேவி "அசுரனிடம் நீங்கள் ஒருவரும் போகவேண்டாம். எனக்கு ஐந்து புதல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் உணவை எடுத்துப் போவான். நீங்கள் கவலைப்படவேண்டாம்." என்று கூறினாள். அப்போது அந்தணர் "அம்மணி எங்கள் உயிரைக் காப்பதற்காக எம் இல்லத்தில் விருந்தினராகத் தங்கியிருக்கும் தங்களில் ஒருவரை அசுரனுக்குப் பலியாக்குதல் மகாபாவம். விருந்தினரையும், அடைக்கலம் தேடியவர்களையும், யாசகம் செய்து வாழ்பவர்களையும் கொல்லுதல் மிகவும் கொடிய பாவமாகும். எனவே தங்கள் கோரிக்கைக்கு நான் உடன்பட முடியாது" என்று அந்தணர் கூறினார். அந்தணரின் உரைகளைச் செவிமடுத்த குந்திதேவி "அந்தணரே தாங்கள் நினைப்பது போன்று என் புதல்வனை அசுரன் கொல்லமாட்டான். அவன் மிகவும் பலசாலி. அவன் எத்தனையோ அரக்கர்களைக் கொன்றிருக்கிறான். அதனால்தான் நான் அவனை அனுப்ப உடன்பட்டேன். நீர் கவலைப்படாமல் அசுரனுக்குரிய உணவுகளைத் தயார் செய்து எனது மகனான பீமனிடம் கொடுத்து விடுங்கள். இன்றோடு அவ்வசுரனால் ஏற்பட்ட துன்பம் நீங்கி, நீங்கள் சந்தோஷமாக வாழ்வீர்கள்" என்று சொல்லி முடித்தாள்.

குந்திதேவியின் உரைகளால் மகிழ்வடைந்த அந்தணர் உணவு தயாரிப்பதில் ஈடுபட்டார். அவ்வேளையில் தருமர் முதலானோர் திரும்பி வந்து சேர்ந்தனர். குந்திதேவியின் ஏற்பாட்டை அறிந்து தருமர் மிக்க

எல்லா உயிர்களிலும் ஒரே ஆத்மாதான் பரவியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையடைந்தார். அப்போது குந்திதேவி "மைந்தா! எமக்கு ஆதரவளித்தவர்க்கு உதவி செய்தல் என்பது தலையாய கடமையாகும். அன்றியும் பீமன் பல அசுரர்களைக் கொன்றவன். பகாசுரனைக் கொன்று இந்த ஊருக்கே நன்மை செய்யும் வலிமை அவனிடம் இருக்கிறது எனவே பயப்படவேண்டாம்" என்று கூறினாள். தாயாரின் உரைகளில் உள்ள நீதியையும் உண்மையையும் உணர்ந்து கொண்ட தருமர் அதற்கு உடன்பட்டார். இதன் பின்னர், பீமன் பெரிய வண்டியொன்றில் உணவுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு அசுரன் இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

பகாசுரனின் இடத்தை அடைந்து ஒரு மரத்தின் கீழ் வண்டியை விட்டு அதிலிருந்த உணவுகளைத் தான் உண்ணத்தொடங்கினான். உணவை உண்டவண்ணம் பகாசுரனைக் கூவி அழைத்தான். "பகனே இங்கே வா உனக்கு உணவு வந்திருக்கிறது" என்று பெருங்குரலில் அழைத்தான். அவன் அழைத்ததைக் கேட்ட பகன் குகையை விட்டு வெளியே வந்தான். வந்து பார்த்த அசுரன் தனக்குக் கொண்டு வந்த உணவுகளைக் கொண்டு வந்தவனே உண்பதைக் கண்டு பெருங் கோபமுற்றவனாய் பீமனை நோக்கி ஓடிவந்தான். "யாரடா நீ எனக்கு வந்த உணவை உண்கிறாயா?" எனக்கேட்டுப் பீமனைத் தாக்கினான். பீமனோ அவனின் தாக்குதல்களைப் பொருட்படுத்தாது எல்லா உணவு வகைகளையும் உண்டு முடித்தான்.

உணவை உண்டு முடித்ததும் எழுந்த பீமனை மிகவும் ஆவேசமாகத் தாக்கத் தொடங்கினான் பகாசுரன். பீமனும் அவனுடன் மிகவும் கடுமையாகப் போரிட்டான். பெரிய மரங்களைப் பிடுங்கிப் பகன், பீமனைத் தாக்கினான். பீமன் அவற்றைக் கைகளால் தடுத்து வந்தான். அவனைத் தன் வலிய கரங்களால் கட்டிப்பிடித்துக் கால்களால் உதைத்து வீழ்த்தினான். பகனைக் கீழேவிழுத்திக் கழுத்தை நெரித்தான். கழுத்து நெரிபட்டதனால் வாயிலிருந்து இரத்தம் வெளியேறியது. பீமன் மேலும் மேலும் பகனைத் தாக்க அவன் உயிர் பிரிந்தது. பகன் இறந்ததும் அவனை எடுத்துச் சென்று நகரின் வாயிலில் போட்டு விட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு, தான் தங்கியிருந்த அந்தணர் வீடு போய்ச் சேர்ந்தான். நகரமக்கள் பகன் இறந்ததை அறிந்து மகிழ்ச்சி கொண்டு பீமனைப் புகழ்ந்து பாராட்டினர்.

தொடரும்........

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு பற்றிய ஒரு கண்ணோட்டம்

அழகு என்பதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையோ அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு இலக்கணமோ கூறிவிட முடியாது. காரணம் என்னவென்றால் அழகு என்பது ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தில் எழுகின்ற உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனை அலைகள், ஆசைகள் ரசனைகள், முதலியவற்றிற்கு ஏற்ப அவனது அழகுக் கோலங்கள் மாறுபடுவதனாலாகும். அழகு என்பது நிலையற்றது. அழியும் தன்மையுடையது. "நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை கடை" என்றார் வள்ளுவர். அழகு இருவகைப்படும். அவை செயற்கை அழகு, இயற்கை அழகு எனப்படுகின்றன. இவ்விரு அழகுகளும் அழியும் தன்மையுடையவை, மாறும் தன்மை உடையவை.

செயற்கை அழகென்பது எமது புற உடலைச் செயற்கைப் பொருட்களைக் கொண்டு அலங்கரிப்பது. இன்று நம்மத்தியில் ஏராளமான செயற்கை அலங்காரப் பொருட்கள் குவிந்து கிடக்கின்றன இவை பெரும்பாலும் பல்வேறு இரசாயனப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நாம் நாளாந்தம் உபயோகப்படுத்தி வருவதனால் அவை நம் மேற்தோலையும் உள்தோலையும் தாக்கி விடுகின்றன. செயற்கை அலங்காரப் பொருட்களைப் பாவித்து வருபவர்களைக்கண்டால் இதன் உண்மை புரியும். இச் செயற்கை அலங்காரப் பொருட்கள் பல்வேறு இரசாயனப் பொருட்களைக் கொண்டிருந்தாலும் இதைப் பயன்படுத்துவோரின் உடல் காலப்போக்கில் அவலட்சணமாகி விடுகின்றது

அடுத்து இயற்கை அழகை எடுத்துக் கொண்டால் அவையும் நிலையற்றவை என்றே கூறத்தோன்றும். இயற்கை அழகு இயற்கை அனர்த்தங்களால் அழிவுறுகின்றன சிதைக்கப்படுகின்றன, சேதிக்கப்பட்டுவிடுகின்றன. குறிப்பாக நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் இவற்றால் ஏற்படும் அனர்த்தங்களால் அவை அழிவுறுகின்றன.

உடல் அழகைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு முதுமொழியுண்டு "Beauty is Skindeep" அதாவது அழகு என்பது மேற்தோலில்தான் தங்கியுள்ளது. உலகில் நடைபெற்றுவரும் உலக அழகிப் போட்டியிலோ அல்லது உலக ஆண் அழகன் போட்டியிலோ தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவரினுடைய அழகு அவரவருடைய உடலைக்கொண்டு பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் தெரிவு செய்யப்படுகின்றது. உடலுக்கு அழகைக் கொடுப்பது தோல். இந்தத் தோலை உரித்து எடுத்து விட்டால் அவர்களது அழகு எங்கே போய்விட்டது? அழிந்து பேய்வடிவம் பெற்று விட்டது. எனவே தான் அழகு என்பது தோலில்தான் அமைந்துள்ளது என்று கூறியிருப்பது பிழையன்று.

ஆனால் உண்மையான அழகு எது என்பதை நாலடியார்,

“ குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே அழகு ”

என்று கூறுகின்றது. அதாவது ஒருவனுக்கு அழகைக் கொடுப்பது அவன் கற்ற கல்விதான். அது அழியாது ஏழேழு பிறவிகளுக்கும் நிலையாக இருக்கக் கூடியது என்பது புலப்படுகின்றது.

முருகு என்றால் அழகு. முருகு என்பது முருகனைக் குறிக்கின்றது. எனவே முருகன் அழகன்.

“ அழகென்ற சொல்லுக்கு முருகா ” என்ற பக்திப்பாடலும்
“ அழகன் முருகனிடம் ஆசைவைத்தேன் ”

என்ற பாடலும் இதை வலியுறுத்துகின்றன.

கந்தபுராணத்தில் வரும் முருகனது விஸ்வரூபக் காட்சியை சூரபத்மன் காண்கின்றான். ஒரு கணம் அவன் முருகனின் அழகுத் தோற்றத்தைக் கண்டு மயங்குகின்றான். அவனது தோற்றத்தில் உலகம் முழுவதையும் காண்கின்றான். “ ஆஹா இவனல்லவோ அழகன், இவனல்லவோ தெய்வம், இவனைச் சிறுவனென்று ஏளனம் செய்து விட்டேன் ” என்று முருகனுடைய தோற்றப் பொலிவிலும், அழகிலும் மயங்கி விடுகின்றான்.

“ கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ ”

“ ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார் ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் குறிப்பிட்ட இவ்விரு பாடல்களின் மூலம் முருகனின் அழகிய கோலம் எடுத்து இயம்பப்பட்டுள்ளது. முருகப்பெருமான் ஏறுமயில் ஏறி விளையாடுபவனாகவும், ஈசனுடன் ஞானமொழி பேசுபவனாகவும் கூறும் அடியார்கள் வினை தீர்ப்பவனாகவும், குன்றுருவ வேல்வாங்கி நின்றவனாகவும், மாறுபடு சூரரை வதைத்தவனாகவும், வள்ளியை மணம் புணர்ந்தவனாகவும், ஆறுமுகமான பொருளாகவும் வியந்து போற்றப்படுகின்றார்.

எனவே இத்தகு பெருமை வாய்ந்த முருகப் பெருமான் தொண்டைமான் ஆற்றங்கரையில் கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்றான். அடியார்களாகிய நாம் அவனை மெய்யன்போடு அனுதினமும் வழிபட்டு பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வதோடு மட்டும் நின்று விடாமல் அவன் அருளால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினந்தோறும் நடைபெற்று வரும் மாகேஸ்வர பூசைக்கு எந்தவிதமான தடங்கலும் ஏற்படாமல் எம்மாலான தொண்டினைச் செய்து முருகனடியார்களின் பசிப் பிணியைப் போக்கி மேன்மை பெறுவோமாக.

சி. நவரத்தினம்

## அன்பு

மேதாவியான பாரதியார் வித்தியாசமான மனிதர். லேசாக சித்தப் பிரமை பிடித்த பையன் ஒருவன் புதுவையிலே இருந்தான். இந்தப் பையனைக் கண்டு பரிதாபப்படுவார் பாரதி. அவன் மனதைப் பிடித்த நோயைச் சரி செய்து விடவேண்டும் என்பார். அவனைத் தம் அருகிலே இருத்திக் கொண்டு பழம் உரித்துக் கொடுப்பார். தடவிக்கொடுத்து உணவை வாயில் ஊட்டுவார். சில நேரங்களில் தம்முடனே படுக்க வைத்துக் கொள்ளுவதும் உண்டு. 'பைத்தியராஜா' என்று கொஞ்சுவதும் உண்டு. இது கண்டு பாரதியாரின் சீடர்களுக்கு சிரிப்பு வரும். பாரதியார் மட்டும், 'அவனைத் திருத்தாமல், தெளிய வைக்காமல் விடமாட்டேன்' என்று பிடிவாதமாய் இருந்தார். என்ன ஆச்சரியம்! கேலிசெய்த நண்பர்கள் வியப்படையுமாறு, சித்தப்பிரமை கொண்ட சிறுவன் தெளிவாக பேச ஆரம்பித்தான். அன்பு செய்தலே நமக்குத் தொழில் என்ற பாரதியாரின் வழியிலே வெற்றி கிடைத்தது.

★ குற்றம் செய்யக் காரணம் தேவையில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்
## திருவாய்மலர்ந்து அருளியவை

### பெண்ணாசைப் பிணிப்பு



கிருகஸ்தாசிரமத்தில் இருந்தபோதிலும் உலகப் பற்றுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கக் கூடும் என்று நவீன கல்வி கற்ற ஒரு வாலிபன் பரமஹம்ஸ ருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது பகவான் அந்த வாலிபனைப் பார்த்து "உலகப்பற்றால் அகப் பட்டுக்கொள்ளாத கிருஹஸ்தன் எப்படிப்பட்டவன் என்பது உனக்குத் தெரியுமா? யாசகத்தை விரும்பிய ஓர் ஏழையானவன் அவனிடம் வந்து ஏதாவது கேட்டால், "அப்பா, நான் பணத்தைத் தொடுகிறதில்லை. என்னிடத்தில் யாசகங்கேட்டுக்கொண்டு நீ காலத்தை வீணாக்கடிக்க வேண்டாம்" என்பான்! ஏனெனில், பண விவகாரங்களில் அவனுக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது. எல்லாம் எஜமானியம்மாள் கையை எதிர் பார்த்தே ஆகவேண்டியிருக்கும். யாசகத்துக்கு வந்த பிராமணன் பிடிவாதமாக நின்று கொண்டிருந்தான், அதைக் கண்டு இரக்கங் கொண்ட கிருஹஸ்தன், அவனுக்கு ஏதாவது கொடுத்துப் போகச் சொல்லலாமென நிச்சயித்துக்கொண்டு, "நல்லது, அப்பா! நாளைக்கு வா ஏதாவது தருகிறேன்," என்றான். அப்பால் அவன் உள்ளே சென்று தன் மனைவியை நோக்கி, 'பிரியே! ஓர் ஏழைப்பிராமணன் மிகவும் கஷ்டப்படுகிறான். அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாம்', என்றான். ரூபாய் என்ற வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் கோபங்கொண்ட அவன் மனைவி, 'நீங்கள் பெரிய தர்மவான்தான்! கல்லையும் மண்ணையும் போல யோசனையில்லாமல் எடுத்தெறியப்படும் வஸ்துவா ரூபாயும்?' என்கிறாள். கிருஹஸ்தன் மறுபடியும் சற்று மன்றாடி 'பிரியே! அவன் பரம ஏழை; ஒரு ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்கக்கூடாது', என்று சொன்னானாகில், அவன் மனைவி, 'அவ்வளவு என் கையிலில்லை; இதோ இரண்டணா இருக்கிறது. வேண்டுமானால் கொண்டுபோய்க் கொடுங்கள்' என்கிறாள். கிருஹஸ்தனுக்கு வேறு வழியில்லாதபடியால் தன்னிஷ்டப்படி செய்ய முடியாமல் தன் மனைவி சொற்படி நடக்கவேண்டியவனாகிறான்! ஆகவே அடுத்த நாள் ஏழைப் பிராமணனுக்கு இரண்டணாத் தான் கிடைக்கிறது. உலகப் பற்றற்றவர்களெனச் சொல்லப்படும் கிரு

★ ஒருபோதும் நம்பிக்கையை இழந்து விடாதே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஸ்தர்கள் கேவலம் பெண்டாட்டிகள் சொல்கிறபடி கூத்தாடுகிறவர்களே யாவர். குடும்ப விஷயத்தில் அவர்களுக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது. இருந்தபோதிலும் அவர்கள் தங்களையொன்றும் மிக நல்லவர்களென்றும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். வாஸ்தவத்தில் இந்த இரண்டு தன்மைகளும் அவர்களிடம் இல்லை.'' என்றார்.

திருமதி செ. அருளானந்தம்

## ஆசை — மனப்பக்குவம் — இறைவன்

மனிதனுடைய மனம் காலியாக இருக்க முடியாது. ஏதாவது உணர்வுகள் அதில் நிரம்பிக்கொண்டுதான் இருக்கும்.

மனிதனாகப் பிறந்தவனுக்கு ஆசைகள் இல்லாமல் இருக்க முடியாது. அவற்றை அடிக்கடி விலக்குவதும் சாத்தியமில்லை.

ஆனால் இந்த ஆசைகள் இரண்டு விதம். ஒன்று — சாத்தியமாகி நிற்பது. செலவழிந்து போகக்கூடிய ஆசைகள். இவற்றை ஒருவாறாக நாம் அனுபவித்துக் கழித்து விடலாம். அப்போது இறைவனிடம் ஈடுபடக்கூடிய பக்குவம் வந்துவிடும். உதாரணமாக ருசியான உணவைச் சாப்பிடுவது, நல்ல உடையை அணிந்து கொள்வது போன்ற ஆசைகள் முதல் வகையைச் சேர்ந்த ஆசைகள்.

வேறு சில ஆசைகள் அநீதமானவை. அவற்றை அடைய முடியாது. அல்லது அடைவது பாவமாக இருக்கும். "ஜனாதிபதியாகிவிட வேண்டும்!" என்று எல்லாரும் நினைக்க முடியுமா? பிறன் மனைவி அழகாக இருக்கிறாள் என்பதனால் அவளை அடைய ஆசைப்படலாமா? இரண்டாவது வகையைச் சேர்ந்த இப்படிப்பட்ட ஆசைகளை அடியோடு வெட்டி ஒதுக்குவதுதான் நல்லது.

நீர்ப்பாசனத்துக்கு ஆறு இருக்கும்போது, விவசாயி ஒரு சிறு கிணற்றை நாடிப் போவதில்லை. நமக்கு முக்தியைத் தருவதற்கு இறைவன் இருக்கும்போது, சிறு லௌகிகமான பொருட்களை நாம் நாடுவதில் பயனில்லை. அந்த ஒவ்வொரு சிறு பொருளிலும், அனுபவங்களிலும் இறைவனையே பார்க்க நாம் கற்றுக் கொள்ளும் போது மனம் பக்குவப்பட்டு விடுகிறது. சாதனம் பிரசாதமாகி விடுகிறது.

இந்துமதச் சிந்தனை.

உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர் தேவாரம்
# இயற்கைப் பொருளழகு

திருஞான சம்பந்தப் பெருமானது திருப்பாசுரங்களில் இயற்கைப் பொருள் வனப்புச் சிறப்பாக அமைந்துள்ளது.

சம்பந்தரின் சீர்காழிப் பதிகங்களில் உருவக அமைப்பு ஒன்றித்துள்ளது.

" எண்ணார் முத்தமீன்று மரகதம்போற் காய்த்துக்
கண்ணார்கமுகு பவளம் பழுக்குங் காழி "

தொகைமிக்க முத்துப்போன்ற பூக்களைப்பூத்து, மரகதம் போன்ற பசுங்காய்களைக் காய்த்து, பவளம் போற் செவ்விய பழக்குலைகளைக் கொண்டுள்ள கமுகுகள் வனப்பு மிக்க காழக மரங்கள் சிறந்திலங்கும் முழக்கம் பொருந்திய சீர்காழி மாநகர் என்று சிறப்பிக்கின்றார்.

சம்பந்தர் பொய்கை வருணனையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" வாவிதோறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே "

என்று அடிகளில் தடாகங்களிலே தாமரைகள் முகங்கள் போலவும், செவ்வாம்பல் வாயிதழ்கள் போலவும், குவளையும் நெய்தலும் இரு கண்கள் போலவும் விளங்குதலாலே வாவிகளெல்லாம் மகளிர் முகத்தை நினைவூட்டி நிற்கின்றது.

மரங்கள் பலவற்றுள்ளும் அழகுடைய சிலவே பாட்டுக்களிற் காணப்படுகின்றன. அவற்றுள் தெங்கு, கமுகு, வாழை, மா, பலா, கோங்கு, வேங்கை, கரும்பு முதலியன தோற்றத்தாலும், பயனாலும் உள்ளத்திற்கு இன்பம் பயப்பன.

" தேன்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா இருப்பை
வேங்கை பூமகிழால் வெயிற்புகா வீழி
மிழலையா னென வினை கெடுமே " என்றும்

எதிலும் ஆசை மிகுதியாக இருக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மாவும்
வருதுமா வள்ளையின் பவரளிக் குவளையைச் சாடியோட"

"மழையார் சாரல் செம்புனல் வந்தலைக் கரையுடைக்
கழையார் கரும்பு கண்வளர் சோலை"

எனவும் இயற்கை அன்னையின் வனப்பை, வளத்தை, வண்ணத்தை, சம்பந்தர் அழகாகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

வயல்களும், தோப்புக்களும், குளங்களும், மாளிகைகளும் ஒரு நிரலாக அமைந்த நகரங்களுக்கு அழகு செய்யும் பான்மையை எடுத்துக் காட்டுகின்றார்.

"நீருளார் கயல் வாவிசூழ் பொழிலீண்ட
மாவய லீண்டு மாமதிற்
றேரினார்மறு கில்விழா மல்கு திருக்களர்"

இத்தேவாரவரிகளிலே, நன்பொய்கைகளைச் சூழ்ந்து பொழில்கள் இருந்திருப்பதினாலே மரங்கள் நீருள் தோன்றும் காட்சி நயம் குறிப்பிடத்தக்கது. பொழில் மரங்கள் நகரத்திற்கு இயற்கையெல்லை போலவும், மதில் சுவர்கள் செயற்கையெல்லை போலவும், விளங்குவமை காட்டப்பட்டது.

கனிகளின் இனிய ரசமும், அதனினும் இனிய தேனும், எப்பொழுதும் நாளினிற் சொட்டிக் கொண்டிருக்கும் பொழில் நிழலிலே சிறிது ஆறுதலடைவோம்.

"குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந் தேன்
பிலிற்றும் குறும் பலாவே"

"பாடெல்லாம் பெண்ணையின் பழம்வீழப் பைம்பொழில்
மாடெல்லா மல்லூர் மாமறு பாடியே"

"கொக்கினிய கொழும் வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குலைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே"

மருத நிலத்தின் பொருள் கூறும் சில பகுதிகளைக் காண்போம். மருத நிலத்தின் செழிப்பு நயக்கத் தக்கதாக சம்பந்தர் எடுத்துக் காட்டுகின்றார்.

ஆரம்பிக்கும்போதே முடிவினைச் சிந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' மெய்ந்திரைந்து செந்நெலின் மென்கதிர் கவரி
செந்நெல், சேற்றுப்படுகளின் செறிவலைகளை
பாய்ந்த தண் பழனம் ''

போதி '' முரிந்து மேதிகள் கரும்புதின் றாவியின் மூழ்கி
வெளித்துப் பாய்வயல் ''

மேதி '' செந்நெல், வயல், கரும்பு, முதலியன சேற்றுப் பொய்கை, தாமரை, கழுநீர், வாளைமீன் என்பனவும் மருத நிலத்துக்கு உரியனவே.

திருஞானசம்பந்தரின் பதிகங்களில் ஐம்புலன்களுக்கும் இனிமை பயக்கும் இயற் பொருள்களைக் கண்டோம் ' நடுநெறிய மனம் வைத் துணர் ஞானசம்பந்தன் '

'' கழுமலை முதுபதிக் கவுணிய ஒறியுமனைய தன்மையை '' என்றும் கூறுவதால் சம்பந்தப் பெருமானது அளவில் பேரறிவு இனிது விளங்கும்.

ந. சிவபாதம்

பகவானைச் சரணடைந்த எவரும் தன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. அது இறைவன் பொறுப்பு என்று இருக்க வேண்டும். சரணடைந்த பிறகு ஏற்படும் இன்ப துன்பங்கள் முன் வினைப்பயனாக ஏற்படுபவை என்று எண்ண வேண்டும்.

சுவாமி இராமகிருஷ்ணானந்தர்.

துறவு என்பது மனதில் தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை அறிந்தபின் அறிவதற்கு வேறொரு தெய்வமுமில்லை

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மை யாமே.

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் தனக்கும் அது தானாச்சு;
புத்தியினா லறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவ ருண்டு
பத்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனதை விடார் பரமஞானி
சுத்தியே யலைவதில்லைச் சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந் தானே.

— அகத்தியர்

ஏட்டிலே எழுதும் நூல்கள் எத்தனை படித்தும் நீதான்
காட்டிலே எரிந்த இலைகள் காவலில் சவம் போலானாய்
காட்டிலே தெய்வமென்று நடந்ததை யாமறிந்தனை
கூட்டினில் நாதை நாதர் குறிப்பறிந்துணர்வாய் நெஞ்சே

— கலைபதிசித்தர்

முனிவர்கள் முதல் பிருகாதி வரையில் உள்ள யோகிகள் பலர் உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை பிறப்பதும் இறப்பதுமே தொழிலாகச் செயற்பட்டு வருகிறார்கள் இந்தச் செயற்பாட்டு வினைகளுக்கு முடிவே இல்லையா. இந்த வினைகளுக்கு பின்னணியாக மறைந்து செயலாற்றும் செயற்கை வீரன் யார், யார் என்று அறிவதற்கு தேவர்கள் முதல் முனிவர்கள் வரை; உலகம் தோன்றிய நாள்முதல் நாளும் பொழுதும் தேடியும் அறிய முயற்சித்தும் இன்று வரை முடிவு ஏதும் கிடைக்காமல் தவிப்புடன் அலைந்து திரிந்து ஏமாற்றம் அடைந்தும் உள்ளனர். இதற்கு சூட்சம வழிகள் பலவற்றை அகத்தியர் முதல் கலைபதி சித்தர்கள் போல் பலசித்தர்கள் வழிகள் கூறியுள்ளனர் பக்தியினால் மனமடங்கி ஒரு நிலையில் மனதை அடக்கி பாழிலே மனதை அலையவிடா

★ என்னை நான் உணரவில்லை என்பது ஒரு எண்ணமே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் மௌனநிலை அடைவதற்கு ஐம்பொறிகளின் செயற்பாட்டை ஒரு வழியில் நிலையில் நிறுத்தி பட்ட மரம்போல் ஆகிய நிலையில் ஒரு காட்சிப் பொருளாகி பைத்தியக்காரன் என்று பெயர்காண்பவர் கண்களுக்கு அவர்களால் இடு பொருளுக்கு இலக்காகி தன்னை அறிந்து சும்மா இருந்தபோது பரம ஞானியாகி அறிந்தவர் கோடான கோடியில் ஒருவன் உண்டு என்றும் அகத்தியமுனிவர் பாடிவைத்துள்ளார்.

ஏட்டிலே அறிஞர்களினால் எழுதி வைத்த நூல்கள் எத்தனையோ படித்தும் காட்டிலே மலைகளைநாடி மௌனமாய் இருந்தும் காணமுடியாமல் நாட்டிலே தெய்வங்கள் உண்டென்று நடந்து அலைந்து திரியாமல் உந்தன் கூட்டிலே (உடம்பிலே உத்தமன் குடிகொண்டுள்ளான்) அதாவது உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரிய பரமாத்மா உன் உடம்பில் குடிகொண்டிருக்கும் ஜீவாத்மாவாக என்றும் உன்னுடன் உறவாகி இரவிலும் பகலிலும் ஒன்றாய் இருந்து அவரவர் வினைகளுக்கேற்ப ஒவ்வோர் உடம்பு எடுத்து ஆடி அலைந்து வினைப்பயன் முடிந்தவுடன் உடல் உயிரைவிட்டு நீங்கிவிடுகிறது. இதுதான் உலகம் தோன்றிய நாள் முதல் நடைபெற்று வருகிறது.

மரணபயம் தான் மனிதனுக்கு பயங்கர எதிரி அதைத்தான் யமன் என்ற பயங்கர உருவம் உள்ளவன். ஒருவன் உலகத்தில் செய்யும் பாவ புண்ணியத்தின் பயனாக மனிதனின் மனமென்னும் மாயையினால் உருவாக்கும் உருவமற்ற மாயா உருவம்.

இங்கே மகான்களின் அநுபவத்தில் கண்ட உறுதிமொழி 'விலைப் போகமே இவ்வுடல் வினை ஒழிக்கால் திணைப்பொழுதும் தாங்காது காண் இவ்வுலகில் இந்த ஊன் உடம்பு' மேலும் முருகபக்தவராக அருணகிரிநாத சுவாமிகள் எவ்வளவோ படித்த ஞானியாக இருந்தும் தான் சிறுவயதில் தர்மத்திற்கு விரோதமான பல காரியங்களை செய்து ஊர் மக்களால் வெறுக்கப்பட்டது மன்றி சுற்றத்தாராலும் கூடப் பிறந்தோராலும் வெறுக்கப்பட்டு தன் மனத்தாலும் வெறுக்கப்பட்டு மனமுடைந்து மலைமேலேறி விழுந்து மரணத்தை தஞ்சமடைய உறுதி கொண்டு மலை உச்சியிலிருந்து பூமியை நோக்கி விழும்போது தனது ஆத்ம குருவாய முழுமுதற் பழமான பரம்பொருளாகிய முருகனை தஞ்சமென்று கூவி அழைத்தபடி விழுந்தார் அத்தருணம் அவ்விடத்தில் அற்புதமான ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. தனித்திருந்து மௌனமாக ஐம்புலன்களை அடக்கி தன்னைத்தான் அறிந்து கொள்வதற்கு பலகாலம் தவமிருந்து காணமுடியாமல் அலைகிறார்கள் மகான்கள் தபசிகள் அநேகமுள்ளனர் அப்படியிருக்க முருகன்மேல் அதி தீவிரபக்தி கொண்ட அருணகிரிசுவாமிகள் தான் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களை உணர்ந்து இனிமேல் இக்கப்பாவி உயிருடன் இருக்கக் கூடாது என்று மனம் ஒரு நிலைப்பட்டு வெதும்பி முருகனைச் சரணடைந்தவுடன் அவ்வாறு முருக மயமாய்க் காண்கிறார். மலைமக்குத் தேறு பார்க்கிறார். மகனைத் தந்தை அழைப்பது போல் எம்பெருமான் முருகன் அருணகிரி தன்னை அறிந்து என்னைச் சரண அடைந்து விட்டான் என்று திருவுளமிரங்கி திருக்கரங்களை நீட்டி அழைக்கிறார். ஒரு தந்தை கூட்டத்தில் தவறவிட்ட மகனைத் திரும்பவும் கண்ட போது தவிப்புடன் ஓடி வருவது போல் முருகனைக் கண்டவுடன் உச்சியிலிருந்து அருணகிரி தாவிப் பாய்கிறார். அப்போது முருகன் அருணகிரியை திருவுளமிரங்கி தன்னுடன் அணைத்து அபயமளிக்கிறார். அத்துடன் தனது புகழ்பாடும் படி முதல் அடியெடுத்து பாட வைக்கிறான். முத்தமிழையுதவு சங்கப்புலவோனாகிய முருகப்பெருமான்.

முருகனால் அணைத்து அருள் பாலித்து அருணகிரிநாத சாமிகளை மரணத்தைப்பற்றி பின்வருமாறு தனது திருப்புகழில் கூறுகிறார்.

குறைவிலொன்று பின்சு சலம் எறும்பு துற்ற
குடிலில்வென்றி நிற்கும் உயிர் பயம்
குலை குலைந்து தொய்ப்பை
இடை நிறைந்த திப்பட கொடிய கொண்டல்
ஒத்தல் உருவமி
மறலி வந்துபட்ட வினைகள் கொண்ட வைத்து
மரணமென்று துக்க மறுகாமுன்
மல இடர்ந்தகற்றுன்
அடி நிலைசந்திருதி நிற்ப
பாசிலில் வந்து முத்திதர வேணும்
அறுகு மிந்த மத்த மலைமயிர்ந்த அப்பு
மறு சிறந்த புல்ப மதி சூடி
அருள் நடஞ்செய் யப்பர்
அருளிரங்கு மகிழ்ந்து அரிய இன் சொல்
செப்பும் முருகோனே
சிறு குலந்தனக்குள் அறிவு வந்துதிக்க
சிறுமி தன் தனத்தை அணைமார்பா
திசைமுகன் திகைக்க அசுரர் அன்றுடைத்த
சிறை திறந்துவிட்ட பெருமாளே

— திருப்புகழ்

பசித்தலும் மரணமும் எப்படி என்பதை தான் படிப்படுவது போல் காட்டி மற்றவர்களும் கடைசி காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வழியையும் தன் திருவாய் மூலம் திருப்புகழில் பாடியுள்ளார். என்பதையும் அதன் பொருளை பின்வருமாறு காண்க.

ஒழுக்கம் தவிர்ந்ததும் அன்பு அந்நாக மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடைய உடம்பு பார்வைக்கு எந்தக் குறைவு மில்லாதவாறு சலம் எலும்பு மச்சை ( தசை ) யினால் பொதியப்பட்ட குடில்போல அமைந்து அந்த குடில் போன்ற வீட்டில் ஒன்றி நிற்கும் உயிர் என்ற மாயப் பொருளும் கடைசி காலத்தில் தொய்வை ( உடம்பு ) இளைல நலைந்து நோய் வாய்ப்பட்டு மரணம் பற்றி நினைத்து மனம் ஏங்கி சேடம் ( கொண்டல் ஒத்தல் ) இழுப்பு உருவாகி மரண பயத்துடன் படுக் கையில் கிடந்து உருகும் போது மறலி வந்து நிற்க ( யமன் ) அவரவர் செய்த கெட்ட வினைகளால் கொண்டலைந்து எனக்கு மரணம் என்று கடைசிப்பயணம் வந்து விட்டதே இறைவா மரணம் என்ற துக்கம் அணுகாமுன் மயிலில் வந்து முத்தி தரவேணும் என்று அருணகிரியார் தான் முருகனை வேண்டுகிறார். தனக்கு வேண்டுவது போல் எல்லா மக்களை யும் வேண்டும்படி அறிவு உறுத்துகிறார்.

சிவம்

மகத்தான இலட்சியத்தை ஒருவன் மேற்கொள்வதும், அதற் காகத் தன் வாழ்நாளையே அர்ப்பணிப்பதும் ஒரு மகோன்னத மான காரியமாகும். ஏனென்றால் அத்தகைய மகத்தான காரி யங்களைச் செய்யாமல், சின்னஞ்சிறு செடி கொடிகளைப் போல் பிறந்து பிறந்து சாகும் மிகவும் நிர்ந்தரமான வாழ்க்கையை நடத்துவதில் என்ன பெருமை இருக்கிறது?

நம் வாழ்க்கையில் மாபெரும் இலட்சியத்துக்குத் துணை யாக்கிக் கொண்டால்தான் அந்த வாழ்க்கைக்கே மதிப்பு உண்டு.

விவேகானந்தர்.

ஆசை காட்டி மோசம் செய்யாதே.

# சந்நிதியான் தெய்வீக நினைவுப் பாமாலை

தெய்வீகம் நிறைந்த தொண்டைமானாற்றினிலே
பூர்வீகம் நிறைந்த பூவரச நிழலிலே - பெருவிருப்பாய்
குடியெனவே அமர்ந்த ஞானக் கதிர்வேலா
அடியவர்கள் மனங்குளிர அருளமுதம் அருள்.

தொண்டைமானாற்றினிலே அருள்யோக பூமியென
அருள்யோகர் மெச்சிய அருள்ஞானக் கதிர்வேலா - நீவிரும்பி
சந்நிதியான் ஆச்சிரமச் சன்மார்க்க நெறிசிறக்க
மெய்ஞ்ஞான அன்பர்களைச் சேர்.

அன்னக் கொடிபறக்க அருள்ஞான வேல்சிறக்க
வண்ணமயிலினிர் புன்னிமயில் மேவும் புண்ணியனே - கடிதினிலே
முன்போல அறப்செய்த பெருமடங்களெல்லாம்
சிறந்தோங்கத் திருவருளைச் செய்.

ஆதி மூலத்தில் அருளொளிரும் பெருவேலோய்
பூவரசின் நிழே புகழ்பூத்த புண்ணியனாய் - நேசமுடன்
அபயகரங்காட்டி அன்னக்கொடி பிடித்து
நடமாடும் மன்னவன் சந்நிதியான் என்றே அறி.

துன்பமுற்ற வேளையிலே தஞ்சம் நீயென்றே
தங்கிவரம் வேண்டவருபவர்க்குக் - கருணையினால்
தங்குமடம் கொடுத்துத் தடுத்து ஆட்கொண்டு
இன்னமுத மருந்தளித்து ஆள்பவன் சந்நிதியான் என்று அறி.

மந்திரங்களின்றியே மாதவர்கள் பூஜை செய்ய
அன்புவரும் அன்பர் சொல்பெருநாமம் - சித்தத்தில்
தித்திக்கும் அமுதாக ஏற்றுத் தினமருளும் வேலவன்
சந்நிதி வாழ் சண்முகனென்றறி.


( தொடரும்......

வ. சிவநேசன்

★ அகமும் புறமும் ஒரே மாதிரி ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# திருக்கேதீஸ்வரம்

## திருவாசகம்
## சபாரத்தினம் சுவாமிகள்
## மீது யாக்கப்பட்ட

# ஓர் அபூர்வ மரபுக் கவிதை

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

( தரவு )

ஞானப்பா லுண்டாரும் நாவலூர் வந்தாரும்
கானத்தாற் கொண்டாடக் கௌரியம்மை யுடனாக
மந்திரத்தா லெழுந்த மாக்கடுலைக் கொண்ட கருங்
கந்தரத்துக் கேதீசன் கருணையிலே திளைத்தவர்கேள்
வானார்ந்த கருக்குரல் வளங்கொண்ட திறல்பரப்பத்
தேனார்ந்த மலர்ச்சோலை திசைநயக்கும் மணம்வீச
வண்ணமலர்க்கொள் சிற்றாலே வாய்ந்ததொரு குடிலமைத்து
எண்ணமெங்கும் சிவமயமாய் இருந்தபெரும் முனிவரரேகேள்.

( தாழிசை )

வாசகத்தின் விழுப்பொருளை வடித்தகனிச் சாறாக்கித்
தேசிகரா யருளோடு தெளிவிட்டாறு புகட்டினையே

வழிபாடிலா ஆதுலர்க்கும் வழித்தொண்டு செய்வார்க்கும்
அழிபசிக்கே அமுதூட்டி ஆதரிக்கும் அன்னையும் நீ

திடமுள்ள உள்ளத்தின் சிந்தனையில் திளைக்கும் நீ
உடலுழைப்பை ஓவாது உகுத்தியதும் எங்ஙனமோ

வெண்மஞ்சக் குவியலிலே மின்னலது படர்ந்ததென
வெண்பஞ்சுத் தாடியிடை மென்முறுவல் அரும்புவதென்

என்பொடுதோல் மாத்திரமே இணைந்துள்ள நின்மேனி
அன்பொடுசேர்த் திருகியதால் ஆரிடராய் ஆகினையோ

---

★ மரம் ஓய்வை விரும்பினால், காற்று அதை சும்மா விடாது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமப்பா ரத்தினமே சற்குருவே என்பவர்க்குக்
காரியங்கள் நீக்கியருட் கதிவழியைக் காட்டினவை நீ

( அராகம் )

மறைபுகழ் தலந்தனில் மகிழ்ந்தினி துறைந்தனை
இறைவனின் நினைவினில் இயைந்திட இருந்தனை

உழைக்கரும் கடியவர் நினைகுடி யடைத்திடில்
மழைக்கரப் புரவல னெனவவர்க் குதவுவை

மருளுறு புலவரின் மயக்கறுத் திருமுறைப்
பொருளிது பொருளல திதுவெனப் புகலுவை

எழுபணி இயற்றிலும் இறைபணி யெனநினைந்
ததுவதில் தொடர்பறுத் தனைத்தனை நாளும் நிறுவுவை

( தாழிசை )

நின்குருதி வியர்வையொடு நிகரில்லா முயற்சியுமே
எனப்பெருகு வாசகப்பேர் எழின்மடமா யெழுந்ததுவே

அன்னைகௌரி பெயராலே அருங்கல்விக் கூடமொன்று
நின்னையன்றி வேறுயார் நிறுவவல்லார் மண்டலத்தில்

அவமாகப் பிறரிடத்தே அலைந்துபொருள் தேடாமே
விவசாய விளைத்திறனால் வேண்டுபணி செய்தனையால்

எதுவந்தால் எமக்கென்ன என்னாமல் வாசகத்தேன்
மதுவுண்டு செம்மாந்து மலர்ந்திருக்கக் கண்டோமால்

( அம்போதரங்கம் )

வாசகத்திற் றிளைத்தாய் நீ
வாக்கினிலே வல்லாய் நீ
ஞானமாய் விளைந்தாய் நீ
நற்றவத்தாற் பொலிந்தாய் நீ
அன்பும் நீ அறனும் நீ
பண்பும் நீ பணிவும் நீ
பற்றும் நீ எளிமை நீ
தேற்றம் நீ தெளிவும் நீ

கோபம் அகிம்சையின் பகைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( தனிச்சொல் )

என வாங்கு

( ஆசிரியச் சுரிதகம் )

கங்கை ததும்புஞ் சடையுஞ் சடையில்
திங்கள் திகழும் அழகு மதனுடன்
வெங்கண் அரவும் விளங்கும் விளங்கக்
கொங்கார் கொன்றை குழுமிச் சூழும்
காதிற் குழையுங் கண்கள் மூன்றும்
ஏதில் வேத மிசைக்கு மிதழும்
நீல மிடறும் நீண்ட நாற் கரங்களும்
கோலவெண் ணீற்றொடு குலவிய மார்பும்
வெய்ய வினைகள் வேரறக் களையுஞ்
செய்ய கமலத் திருப்பத முங்கொடு
திருவருட் சக்தியாய்த் திகழ்ந்து தோன்றும்
பருப்பதன் கௌரியைப் பாகமாய்க் கொண்ட
ஆதிய மந்தரு மனைவா யின்வா
கேதிச் சரத்தினிற் கெழுமிய காதல்
நிற்பினு மிருப்பினுங் கிடப்பினும் நடப்பினும்
பொற்பொ டென்றும் பொருந்தும்நின் மனமே
பாடப் பாடப் பரிவுற் பயில
நாட நாட நயம்பல கொண்ட
இன்ப ஊற்றா யெங்கும் பெருகி
என்பு தசையொ டிதயமு முயிரும்
உருக உருக்கி யொளிப்பிழம் பாக்குந்
திருவா சகத்தின் செழும்பொரு ளுன்னைக்
கற்றுத் தேர்ந்த காட்சியோ ரல்லால்
மற்றை யோரும் மகிழ்ந்துத் தெளிய
குஞ்சுக் கூட்டுங் குரீஇ யென்னச்
செஞ்சொற் செறிவொடு சேர விளக்கி
ஈனப் பிறவி யெதிர்நில்லா இனிய
வானமு மென்ன வார்க்கும்நின் வாக்கே
புல்லிய கேதீச் சரத்துச் சூழலில்
நல்லவ ரெவரும் நலிவுறா திருக்க
உறையுளு முணவு முதவ வேண்டி
நிறைவள குளமுங் கூவலுந் தொட்டும்
மடமுஞ் சாலையும் மற்றுள வமைத்தும்

எதையும் கைமாறு கருதாமல் கொடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை தவறாது கல்விக் கூடமும்
சிந்தைக் கினிய சிவனார் பணியும்
நந்தன வனத்தை நலம்பெற வளர்த்தும்
ஆய விலையிலா அயராது செய்தினும்
நோயிலை யெனினும் நடையிற் றன்மேனி
திருவா சகத்தமி ழொளிதனை யெவரும்
பெருகார் வத்தொடு பெயரிட் டழைக்குஞ்
சபாரத் தினமாந் தனிப்பெருந் துறவி
அவாவினை யறுத்தே ஐம்புல னொரீஇ
மனமொழிக் காயம் மரபுமுறை தவறாது
தினந்தினஞ் சின்னவாஞ் செயல்வகை யெல்லாந்
துணிவுறு தூய முனிவரா,
நினைதொறும் நினைதொறும் நெகிழுமென் னெஞ்சே.

நயம்

ஆக்கம்:
புராணவித்தகர் மு. தியாகராசா

## காட்சிகண்டேன்

சீர்பூத்த கேதீஸ்வ ரத்தான்பாதம்

திருவாச கத்தேனால் அபிஷேகித்துப்

பார்பூத்த பலம்நீத்துப் பரமானந்தப்

பலன்பூத்த சபாரத்தி னம்சுவாமிப்

பேர்பூத்த நினைவுமலர் படிக்கும்போது

பிறைபூத்த பரமனுடன் அன்னைநிற்கும்

தார்பூத்த கைலாயக் காட்சிகண்டேன்

தவம்பூத்த சுவாமிகளின் திருத்தாள்போற்றி


அருட்கவி
சி. விநாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

திரு. கே. றீ. வேல்ஸ்மன் என்பவர் மன்னாரிலுள்ள அடம்பன் பகுதியில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவருடைய சொந்த இடம் திருநெல்வேலியாக இருந்த பொழுதிலும் இவர் மன்னாரிலேயே வாழ்ந்து வந்தார். இவர்களுடைய மூதாதையர்கள் சைவர்களாக இருந்தாலும் இவர்கள் சில தலைமுறைகளுக்காக கிறிஸ்தவமதத்திற்கு மாறியிருந்தவர். இத்தகைமையில் திரு. கே. றீ. வேல்ஸ்மன் அவர்கள் சட்டரீதியாக கிறிஸ்தவராக இருந்தாலும் சைவசமயத்தில் நம்பிக்கையும் முருகப்பெருமானை உளப்பூர்வமாக வழிபடுகின்ற இயல்புள்ளவராக விளங்கினார்.



1960-ஆம் ஆண்டளவில் இவர் மன்னாரில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் சந்நிதி கோவிலை வந்தடைந்தார். அப்பொழுது சந்நிதியின் தெற்குத்திசையில் உள்ள தென்னந்தோப்பின் மத்தியில் ஆனந்தாச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது. அதனை அப்பொழுது மயில்வாகனம் சுவாமிகள் சிறப்பாகச் செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த ஆனந்தாச்சிரமத்திற்கு செல்லும் வழியில் ஜேர்மன் நாட்டிலிருந்து இங்கே வந்து ஆத்மீக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த ஜேர்மன் சுவாமிகளின் இருப்பிடம் அமைந்திருந்தது. ஜேர்மன் சுவாமிகள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மடத்திற்கு எதிர்த்திசையில் ஒரு கிணறும் அமைந்திருந்தது.

திரு. வேலன்டைன் அவர்கள் சந்நிதி கோவிலை வந்தடைந்து சந்நிதியானை வழிபட்டபின் ஜேர்மன் சுவாமிகள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த இடத்தைச் சென்றடைந்தார்கள். அங்கே சுவாமிகளினுடைய மடத்திற்கு எதிர்த்திசையில் ஒரு கிணறு இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். அக்கிணற்றுக்கு அருகில் சென்று தான் தேடி வந்த பொருளை எடுக்கின்ற முயற்சியில் ஈடுபடலானார். அங்கே தான் தேடிவந்த பொருளை எடுப்பதற்கு அடையாளமாகப் பயன்படக் கூடிய ஒரு கல்லையும் கண்டு கொண்டார்கள். இப்பொழுது திரு. வேலன்டைன் அவர்களுக்கு அளவு கடந்த ஆனந்தம் மனதில் உறுதியான நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது. அந்த கல்லுக்குக்கிட்டே சென்று வேக்ஸ்மன் அவர்கள் அதனை மெதுவாகக் கிளப்பிப் பார்த்தார்கள் என்ன ஆச்சரியம்! அவர் எதிர்பார்த்து வந்த திருநீறு அதற்குள்ளே காணப்பட்டது.

ஆம்! திரு. வேக்ஸ்மன் அவர்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்த பொழுதிலும் சந்நிதியானைத் தினமும் வழிபடுகின்ற வழக்கம் உள்ளவர். ஆனால் திரு. வேக்ஸ்மன் அவர்கள் நேரடியாக சந்நிதிக்கு வரமுடியாதிருந்தாலும் சந்நிதியானுடைய திருநீறு போன்ற பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாததும் அவருக்கு ஒரு பெரிய குறையாக இருந்தது. இதனால் சந்நிதிமுருகன் கனவிலே காட்சி கொடுத்து குறிப்பிட்ட இடத்தில் திருநீறு இருப்பதுபற்றி அவருக்குத் தெரிவித்து அதனைச்சென்று எடுக்குமாறும் அருட்கட்டளை வழங்கியிருந்தார். அவரும் லண்டனிலே இருந்து இங்கே வந்து குறிப்பிட்ட அந்த இடத்திற்கு கனவிலே தெரிவித்த அடையாளத்தின்படி சென்று அந்தத் திருநீற்றை எடுத்துத் தானும் அணிந்து மற்றவர்களுக்கும் வழங்கி சந்நிதியானின் அருளை நினைந்து ஆனந்தபரவசமடைந்தார்கள்.

பேரவையினரால் நடாத்தப்படும் வெள்ளி நிகழ்வுகளிலும் மற்றும் விசேட நிகழ்வுகளிலும் சத்தியசாயி சேவை நிலையத்தினர் பஜனை நிகழ்ச்சியை எமது ஆச்சிரமத்தில் வழங்கிவருகின்றனர். சத்தியசாயி சேவா நிலையங்களின் யாழ்மாவட்ட இணைப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர், வடமராட்சியைச் சேர்ந்த திரு. சௌந்திரராசா அவர்கள் தற்பொழுது சத்தியசாயி அமைப்பினரால் சர்வ தேசரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆன்மீகக் கல்விச் செயற்பாட்

இளமையில் முகம் அழகு. முதுமையில் உள்ளம் அழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினை எமது பிரதேசத்திற் செயற்படுத்துவதிலும் திரு. சேனாதிராசா அவர்கள் அக்கறையுடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற திரு. சேனாதிராசா அவர்களை அண்மையில் எமது பேரவை விடயம் தொடர்பாக அவரது பத்திரிகை நிலையத்திற் சந்திக்கச் சென்றபொழுதே மேற்படி கே. ஸ்ரீ. வேக்ஸ்மன் அவர்களுக்கு நடந்த அந்த அற்புத அநுபவத்தை எமக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இந்தச் சம்பவத்தை திரு. கே. ஸ்ரீ. வேக்ஸ்மன் அவர்கள் எடுத்துக் கூறியபொழுது தான் கிறிஸ்தவனாக இருந்தாலும் தனது உள்ளுணர்வு சைவசமயத்தின்பால் அதிகம் நாட்டம் கொண்டிருப்பதனைத் தனக்குத் தெரிவித்தது பற்றியும் திரு. சேனாதிராசா அவர்கள் எமக்கு எடுத்துக் கூறினார்கள்.

எமது சமயத்தையும் அதன் சிறப்பையும் விளங்கிக் கொள்ளாதவர்களும், உண்மையான பக்தர்களுக்கு இறைவனுடைய அருளும் ஆசீர்வாதமும் எப்பொழுதும் கிடைத்தே வருகின்றதென்பதை முழுமையாக உணராதவர்களும், மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக மாற்று மதங்களை நாடுகின்றவர்களும் எமது மத்தியில் வாழத்தான் செய்கின்றார்கள். எமது பிரதேசத்தில் மட்டுமன்றி இடம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் தற்பொழுது வெளிநாடுகளிலும் இத்தகைய மதம் மாறும் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் அறியக்கூடியதாகவுள்ளது.

உலகத்தில் ஒப்பிட்டுக் கூற முடியாத உயர்ந்த உறவு முறையே தாய்க்கும் சேய்க்கும் இடையில் நிலவும் உறவு முறையாகும். தாயைவிட உயர்ந்தது உலகத்தில் எதுவுமே இருக்கமுடியாது. ஒரு தாய் உயிருடன் இருக்கும் பொழுது அந்தத்தாயை நிராகரித்து இன்னொரு தாயை ஒருவன் நாடுவதைப் போன்றதே ஒருவன் ஒரு மதத்தை விட்டு இன்னொரு மதத்தை நாடுவதும்.

சந்நிதி ஒரு அற்புதமானதலம். அங்கே அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற சந்நிதி வேலன் தாயினும் மேலான அருளைத் தனது அடியார்களுக்கு வழங்குவதுடன் தனது அற்புதலீலைகளையும் அவர்களுக்குக்காட்டி வருகின்றான்.

இத்தகைய அருளையும், அற்புதத்தையும் அநுபவிப்பதற்கும் ஒரு பேறுவேண்டுமல்லவா? திரு. கே. ஸ்ரீ. வேக்ஸ்மன் அவர்கள் மாற்று மதத்தவராக இருந்த பொழுதிலும் தாயன்புகொண்ட சந்நிதியான் அவருக்கும் அந்தப் பேற்றினை வழங்கியுள்ளார் அல்லவா?

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்

குழந்தையின் பள்ளிக்கூடம் தாயின் இதயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

ஒரு நாட்டிலே தோன்றுகின்ற பெரியார்களினாலே அந்த நாடு புகழ் பெறுகிறது. அதிலும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த, வாழுகின்ற சான்றோர்களினால் அந்நாடு இன்னுமின்னும் பெருமை பெறுகிறது.

> "உண்டாலம்ம இவ்வுலகம் ........
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே ......"

என்பது புறப்பாடலொன்று. இந்த வரிசையில் எம் ஈழநாட்டுப் பெரியார்களின் முன்னணி பெறுமொருவராக நம் நல்லை நகர் ஆறுமுக நாவலர் திகழ்கிறார்.

சைவ சமய நெறியின் சீர்திருத்தச் செம்மலும் ஆகிய பெருந்திருமான நல்லை ஆறுமுகநாவலரின் சைவப்பணி பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

அன்று சமண நெறியின் அலைப்பினால் தமிழகமும் சிக்குண்ட போது தவித்த சமயகுரவர்களாம் நால்வருக்குப் பக்தி இயக்கம் பரிகாரம் தந்தது போல நம் யாழ்ப்பாணத்தையும், தென்னகத்தையும் கிறிஸ்தவ மத ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்த பெருமை ஐந்தாம் குரவராகிய ஆறுமுகநாவலரையே சாரும்.

நால்வரும், பக்திதோய்ந்த பதிகங்களாற் சைவ எழுச்சிக்குப் பணியாற்றியவாறு அன்று நம் ஆறுமுகநாவலர் சைவசமயத்தைக் காத்து எழுச்சியுற வைக்கச் சைவப்பிரசங்க முறையைக் கையாண்டார். இக் காரணங்களினாலன்றோ நாம் அவரை ஐந்தாம் குரவரென்று ஏத்துகிறோம்.

ஈழத்திலும் தமிழகத்திலும் அந்நியராம் ஆங்கிலேயரின் ஆட்சியும், கிறிஸ்தவ மதத்தின் ஆக்கிரமிப்பும் விஞ்சிய காலம் அது. ஆங்கில மொழி அரசு கட்டிலேறி எம்மவர் மொழியை நசுக்க, கிறிஸ்தவமதமானது, சுழல் காற்றாய் வீசிச் சைவநெறியை நிலை குலையச் செய்த காலம் அது. ஆம்! எமது இனத்தின் இருள் மிகுந்த அந்த 19 ஆம் நூற்றாண்டின்

முன்னேறிச் செல், எப்போதும் முன்னோக்கியே நட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதம்பகுதிகள் தான் நாவலராம் உதயபானு உதித்த காலம். அது 1821 ஆம் ஆண்டு பக்திக்கு வித்தான ஞானப்பிரகாசர் பரம்பரையிலுதித்த பாலனுக்குப் பரமன் நெறி பற்றிய பாடம் புகட்ட வேண்டுமா? கல்வி கேள்விகள் நிரம்பிய ஆறுமுகம் தமிழ் மொழி இலக்கண இலக்கியமும் வடமொழியும் கற்றுத்தேறி, மேற் கல்விக்காக யாழ்ப்பாணம் மத்திய ஆங்கில பாடசாலைக்குச் சென்றார். ஒரேயொரு ஆங்கிலக்கல்லூரியான அங்கு தான் பீற்றர்பேர்சிவல் துரை அதிபராக விளங்கியவர். இலங்கையிற் சமயம் பரப்பவென்றே அனுப்பப்பட்ட பெரிய பாதிரியார் அவர் நிரம்பிய அறிவாளி. விவேகியும் கூட.

ஆறுமுகத்தின் அறிவும் ஆற்றலும், அன்பும், அடக்கமும் தமிழ்ப் புலமையும், தன்னம்பிக்கையும் பாதிரியாரைக் கவர்ந்தன. கிறிஸ்தவ பிரசாரத்துக்குதவும் பைபிள் மொழி பெயர்ப்புப்பணியும் ஆறுமுகத்திடம் விடப்பட்டது. தனக்கொப்புவித்த பணிகளைப் பேர்சிவல் கல்லூரியில் ஆசிரியராயிருந்த வேளையிலே ஆற்றிக் கொண்டிருந்த போது தான் அவருக்கு உண்மையான ஞானம் உதித்தது. எமது சிவநெறி வாழ இவ்வாறு பணி செய்ய ஆளில்லையா! கிறிஸ்தவருக்கு இருக்கும் சமய உணர்ச்சியில் எள்ளளவாவது இன்றி இருக்கும் நாம் சிவத்துரோகிகளல்லவா? என்று எண்ணியது அவருள்ளம் உத்தியோகத்தையும், இல்லற வாழ்வையும், தம் செல்வங்களையும் சைவத்தினதும், தமிழினதும் வளர்ச்சிக்காகப் பரித்தியாகம் செய்ய உறுதி பூண்டார் நாவலர் பெருமான். கிறிஸ்தவ பாதிரியார் கையாண்ட மார்க்கங்களையே சைவ எழுச்சிக்கும் பயன்படுத்தத் தொடங்கினார். இலவசக்கல்வி இயன்றளவு சலுகை, வறுமை ஒழிப்பு, சைவப்பிரசாரங்கள், கல்வி வசதிக்காகப் புத்தகங்களை வெளியிடுதல், சைவ ஆலயங்களிற் பூசை வழிபாடுகளில் சீர்திருத்தம் கண்டனப்பத்திரிகைகள் வெளியிடல் என்று இவ்வாறாக நாவலர் சைவப்பணிகள் விரிந்து சென்றன. அது பெரியதோர் விருட்சமாகியது.

(தொடரும்.....

M. S. ஸ்ரீதயாளன்

யோகியின் இலட்சியம் அமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஞ்சணி கண்டன் எந்தை

இறைவனின் அளப்பரும் கருணையை எடுத்துக் கூறுவதற்கு விடமுண்டகண்டன் நஞ்சணிகண்டன் ஆலம் அமுது செய்தான் என விரித்துப் பாடியுள்ளார்கள் நாயன்மார். அருளாற்றலையும் நித்தியத் தன்மையையும் விளக்குவது நீலகண்டம், மான், அக்கினி, உடுக்கை, கபாலம், பாசம், அங்குசம், சூலம், பரசு, வாள் ஆகியவற்றைக் கரங்களில் ஏந்தி சடா முடியிற் பிறையையும் கங்கையையும் மலர்களையும் தரித்து, பாம்புகளுடன் கபால மாலையும் விளங்க நிறைவித்த நிமலர் ஆடல் வல்லவனாகிய நடராஜப்பெருமான் எழுந்து வந்து ஆலகால விடத்தை ஏன் கண்டத்தில் வைத்திருக்க வேண்டும். தேவர்கட்கும் அசுரர்கட்கும் பகைமை உண்டாகி அநேகர் இறந்து போகவே இறைவனை மறந்த நிலையில் திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தருந்தி நீண்டகாலம் வாழ்ந்து போகிடலாமென்ற விசித்திர அவாவினால் இச்செயலில் இறங்கினர்.

அகங்காரத்தின் விளைவாக கடலைக் கடைந்த போது சகலரும் பலியாகத் தருந்த விடம் அல்லவா வந்தது. தேவர்கள் தமது பிழையை உணர்ந்து இறைவனிடம் சரணடைந்தனர். நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லா ஜீவராசிகட்கும் கருணை புரியும் பரம்பொருள் தேவர்கட்கு மன்னிப்பு வழங்கி யாவரும் நிறுத்த முடியாத அந்தக் கொடிய விடத்தை உள்ளும் புறமும் அல்லாமல் தன் திருக்கண்டத்திலே நிறுத்திவிட்டார். இதன்காரணமாக நீலகண்டன் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

அந்த விடத்தை எடுத்து இறைவன் மிடற்றில் அடக்கா விடில் சகல உயிர்கட்கும் அனர்த்தத்தை யல்லவா உண்டாக்கி விடும். இதனை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "கனைத்தெழுந்த வெண்திரை சூழ் கடலினிடை நஞ்சு தன்னைத் தினைத்தனையா மிடற்றில் வைத்ததேவன் என்றும் கடலினில் அமுதோடு கலந்த நஞ்சை மிடற்றினில் அடக்கிய வேதியன்" என்றும் அப்பர் பெருமான் "கடலில் நஞ்சு அமுது உண்டவர் கை விட்டால் உடலினார் கிடந்து ஊர்முனி பண்டமே" எனவும் சுந்தரமூர்த்தி நாயனார் "ஆலந்தான் உகந்து அமுது செய்தான்" எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய திருச்சாழற் பதிகத்தில் "ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன், மால் உள்ளிட்ட மேலாயதேவர்"

கடன் பெறுவது நட்புக்கு உகந்ததல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வீடுவர் தாம் சாமுவேல் எனவும் திருமுறைகளிற் பாடியுள்ளவை நற்சான்றுகளுடன் திருக்கருணையை உணர்த்துகின்றன. எனவே, நாயன்மார் பாடிய திருமுறைகளை இறைவன் வாக்காக நாம் கடைப்பிடித்து வருவது மிகவும் சாலச்சிறந்தது. யாவரும் மேலும் முன்னோர் காட்டிய நல்வழிகளைப் பின்பற்றி வாழ்ந்தால் இறைவன் திருக்கருணை எமக்கும் கிடைக்கும்.

தொகுப்பு :
க. சிவசங்கரநாதன்

## எதில் நாட்டம் வேண்டும்

அறநூல்களில் கூறப்படும் கருத்துக்களை அறிந்து கொள்வதிலும், தெரிந்து கொள்வதிலும் உள்ள நாட்டம் குறைவடைந்து செல்வதால்தான் சமுதாயத்தில் அறத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் அதிகரித்துச்செல்கிறது

கந்தபுராணம், பாரதம், கம்பராமாயணம் போன்ற அறநூல்களை வேலை செய்கின்றவர்கள்கூட துலா மிதிக்கின்ற இடத்திலும், சுருட்டு சுற்றுகின்ற இடத்திலும், வேலை செய்த படியே அவற்றை அறிந்துகொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை எமது முன்னோர்கள் செய்து அவற்றை அறிந்து கொள்வதில் நாட்டம் காட்டினர். இன்று இளம் சமுதாயத்தினர் மட்டுமன்றி பெற்றோர்கள்கூட இவற்றில் நாட்டமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த நிலையில் ஞானச்சுடரில் வெளிவந்துகொண்டிருக்கின்ற பெருங்கதைகளும், ஏனைய ஆத்மீகக் கருத்துக்களும் பெற்றோருக்கும், இளம் சமுதாயத்தினருக்கும் அறக்கருத்துக்களில் நாட்டத்தை ஏற்படுத்த உதவுகின்றது.

ஐப்பசி மாத மலர் வெளியீட்டில்
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்

நல்லவர் உள்ளம் நல்லவர் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வாசகர்களிடையிலான போட்டி வினாக்கள் - 1999

1. மயில்வாகன சுவாமிகள் தென் இந்தியாவிற்குச் சென்று அங்கே யாரைத் தன்னுடைய குருவாகக் கொண்டிருந்தார்?

2. யாழ்ப்பாணத்திலே அரசர்கள் பெயரில் இயற்றப்பட்ட இரு வைத்திய நூல்களின் பெயர்களும் எவை?

3. "ஞான பண்டித கலாவித்துவி" இந்த விருது யாரால் யாருக்கு எப்பொழுது வழங்கப்பட்டது?

4. விசித்திரமான அம்சங்களுடன் கூடிய விநாயகர் விக்கிரகங்கள் காணப்படும் நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக? (இலங்கை, இந்தியா தவிர)

5. தமது வலது பெருவிரலை வெட்டி குருவிற்குத் தட்சணையாக வழங்கியவன் யார்?

6. சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்துமூவர் குருபூசை மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது யாருடைய நினைவாகக் கட்டப்பட்டுள்ளது?

7. அரிசி எல்லாமே முடிவடைந்து விட்டது. அடியார்கள் கூட்டம் வந்து கொண்டிருக்கின்றதே என்று கவலைப்பட்ட சுவாமிகள் பக்கத்தில் இருக்கும் ப. நோ. கூ. சங்கக்கடையில் கடனாக ஒருமூடை அரிசியை வாங்குவதற்கு ஆயத்தமாகின்றார். அப்பொழுது "ஒருமூடை அரிசி கொண்டு வந்திருக்கின்றேன். அதை உங்கள் தொண்டர்களைவிட்டு இறக்குங்கள்" இந்தச் சம்பவம் இடம் பெற்ற திகதியைக் குறிப்பிட்டு அவ்வாறு அரிசியைக் கொண்டு வந்தவர் பெயரையும் குறிப்பிடுக?

8. இடைவெளிகளை நிரப்புக

மோகந் தவிர்த்துன் .................................. ..................................

.................................. .................................. அருணாசலரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. "பாணமாக ஒரு சதமும் இலஞ்சமாக இதுவரை பெற்றுக் கொள்ள வில்லை" இது யாரால் கூறப்பட்டது? எந்தச் சந்தர்ப்பத்திற் கூறப் பட்டது?

10. நல்லூரில் உள்ள திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது தென் இந்தியாவிலிருந்து புனிதப் பொருட்களாக அங்கே கொண்டுவரப்பட்ட பொருள்கள் யாவை?

11. நெருப்பாற்றில் மயிர்ப்பாலம் போட்ட கதைபோலும் என்னும் உவமை எதற்காக எடுத்தாளப்பட்டுள்ளது?

12. சிவனுக்கும், விநாயகருக்கும் ஐம்முகம் உள்ளன. வேறொருவர் ஐம் முகம் உடையவர் அவர் யார்?

13. தமது பூசையின் முடிவில் நடராஜப் பெருமானது திருச்சிலம் பொலியைக் கேட்டு மகிழ்ந்திருந்த மெய்யடியார் யார்?

14. தக்கனின் யாகத்தின்போது அகோர வீரபத்திரர் யாகசாலையில் சார்த்திவைத்த சிவதனு ஸ்ரீமந்நாராயணரின் மீது விழுந்தமையி னால் நேர்ந்த குற்றம் எங்ஙனம் பரிகரிக்கப்படும் என்று சிவபிரான் அருளிச் செய்தார்?

15. வீமனுக்குப் பதினாயிரம் யானைப்பலம் உண்டாதற்காக இரச பானம் கொடுத்தவர்கள் யார்?

16. இலக்குமிதேவி முனிவர் ஒருவரிடத்தே தன் அருளாட்சியைச் செலுத் திக் கொண்டு அதனை மன்னன் ஒருவனிடத்தே தங்கச் செய்தி ருக்கிறாள். அம்மன்னன் யார்?

17. பாரதப் போர்க்களக்காட்சியை அரண்மனையிலிருந்தவாறே காண் பதற்கான அகக்கட் பார்வையைத் தருவதாகக் கண்ணன் கூறிய போது அது வேண்டாமென மறுத்துரைத்தவர் யார்?

18. துரோணாச்சாரியாரால் அருச்சுனனுக்கு வழங்கப்பட்ட அஸ்திரம் யாது?

19. மண்கரையும், மயல் கரையாது என்னும் எடுத்துக்காட்டு எதற் காக ஆளப்பட்டுள்ளது?

20. சரவணனுக்கு முனி பத்தினியர் அறுவர் திருமுலைப்பாலூட்டியிருக் கின்றனர். அவர்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்?

அகந்தை இல்லாமல் பணியாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வேட்டியை உலரச் செய்யும் சூரியஒளி சூரியகாந்தக் கல்லின் மூலம் படச்செய்கின்ற போது வேட்டி பொசுங்கி விடுகின்றது என்னும் எடுத்துக்காட்டு எதற்காக ஆளப்பட்டுள்ளது?

22. 'ராம' நாம ஜெபத்தால் கொள்ளைக்காரன் ஒருவன் மாமுனிவராகினான். அம்முனி பெயரென்ன?

23. "நிவேதனப் பொருள் என்ன வந்தாலும் அதைச் சுவாமிக்கு என்று வை" நாலாகப் பகுத்து மூன்று பங்கையும் அவித்துக் குவித்து விட்டுக் கதவைத்திறந்து கர்ப்பூரத்தைக் கொளுத்திவிடு" இது யார், யாருக்குக் கூறியது?

24. மூவகை இலிங்கங்கள் எவை?

25. அன்னம் பகிர்ந்து இங்கு அலைந்தோர்க்கு ....... என்று தொடரும் பாடல் யாரால் எந்த நோக்கத்திற்காக பாடப்பட்டது?

## ஆறுபடை வீட்டின் தத்துவம்

- ★ தெய்வயானையை மணந்து கல்யாணமாக விளங்கும் தலம் திருப்பரங்குன்றம்.
- ★ சிந்தனையாகிய அலைகள் வந்து திருக்கோயிலின் மதிற் புறத்தே மோதி, அலைபாயும் துன்பங்களைத் துடைத்தெறியும் இடம் திருச்செந்தூர்.
- ★ ஞான தண்டபாணியாகக் காட்சி அளிக்கின்ற யோகத்தலம் திருஆவினன்குடி.
- ★ தந்தைக்கு இதமாக ஓம் என்பதன் உட்பொருளை உபதேசித்த திருத்தலம், திருவேரகம் ( சுவாமிமலை )
- ★ சல்லாபமாகக் குறிஞ்சி நிலமாகிய மலைகளில் விளையாடுகின்றதலம் - திருத்தணி.
- ★ விநோதம் - பொழுது போக்காக ஞானப்பழம் உதிர்கின்ற சச்சிதானந்த சோலையாக விளங்குவது பழமுதிர்சோலை!

★ பயங்கரமானது பகைவன் மனம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் போட்டிக்கான விதிகள்

1. போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்பட வேண்டும்.

2. மலரில் இணைக்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய இலக்கங்களைத் தெளிவாக எழுதி அவற்றிற்குரிய விடைகளை மட்டும் எழுதினாற் போதுமானது.

   விடைகள் சுருக்கமாகவும், எழுத்துக்கள் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

3. விடைகளை அச்சிடுவதோ, பிரதிசெய்வதோ, போட்டோப்பிரதி எடுப்பதோ அனுமதிக்கப்படவில்லை.

4. போட்டியிற் பங்கு பற்றுபவர்கள் தங்கள் முழுப்பெயர், விலாசம், வயது என்பவற்றை மறக்காது குறிப்பிடவும்.

5. வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலர்களில் இருந்தே எடுக்கப்பட வேண்டும்.

6. சரியான விடைகளை எழுதும் வாசகர்களில் வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளைச் சபை தெரிவுசெய்யும்.

7. முதல் மூன்று அதிஷ்டசாலிகளுடன் மேலும் பத்துப்பேருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். வெற்றியீட்டியோருக்குரிய பரிசில்கள் ஞானச்சுடரின் 2000 ஆம் ஆண்டு தைமாத மலர் வெளியீடு நடைபெறும் ஞாயிற்றுக்கிழமை ( 30 - 01 - 2000 இல் ) வழங்கப்படும்.

   வெற்றிபெறும் அதிஷ்டசாலிகளுக்கு முற்கூட்டியே தபாலில் அறிவிக்கப்படும் ஆகவே போட்டியிற் பங்குபற்றுவோர் தமது வீட்டு முகவரியைத் தவறாது தெளிவாக விடைத்தாளிற் குறிப்பிடவும்.

8. விண்ணப்பங்களை வாசகர் போட்டிக்குழு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி தொண்டைமானாறு என்ற முகவரிக்கு 05 - 01 - 2000 இற்கு முன்பு தபால் மூலமோ நேரிலோ கையளிக்கலாம்.

○ ★ ○ ★ ○

உணர்ச்சியை வெளிக்காட்டுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வழங்கும் வாசகம்

இடைக்காலத்தில் சைவ சமயத்தைக் காத்துப் புத்துயிர் பெறச் செய்தவர்கள் நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், வாதவூரர் ஆகிய நான்கு சமய குரவருமாவர்.

இவருள்ளும் அறிவு நிலையாகிய ஞானத்தொண்டினால் தனிச் சிறப்பு எய்தியவர், வாதவூரர்.

இவரைத் திருவாதவூரர் ஆளுடைய அடிகள், மணிமொழிப் பெருமானார் என்றெல்லாம் போற்றுவர்.

வைகைப் பெருநதிக்கரையில் குன்றாத புகழுடையதாய் விளங்கியது திருவாதவூர். அங்கு அந்தணர் குலத்தில் வாதவூரடிகள் அவதரித்தார். பதினாறு ஆண்டுகளுக்குள்ளே எண்ணெண் கலைகளிலும் தேர்ந்து நின்றார்.

இதனைக் கேள்வியுற்றான் மன்னன் அரிமர்த்தன பாண்டியன். உடனே வாதவூரரைத் தன் அவைக்கு அழைத்து வந்து முதலமைச்சராக்கி மேம்படுத்தினான். அடிகளும் மன்னனுக்குக் "கண்ணும் கவசமுமாக" நின்று பணிபுரிந்தார். ஆயினும் அவரது ஆழ்மனத்தில், இறையருளைப் பெற்று, மெய்ப்பொருளை உணர்ந்து, பேரின்ப நிலையை அடைய வேண்டுமென்ற நாட்டமே வேர் கொண்டது.

அந்நிலையில் பாண்டியன் அவரைப் பெரும்பொருள் கொண்டு சென்று கடல்துறையில் வெளிநாடுகளிலிருந்து வந்திறங்கும் குதிரைகளில் தங்கள் சேனையத்துக்குப் பயன்படத்தக்க உயர்ந்த சாதிக் குதிரைகளை வாங்கிவருமாறு பணித்தான். வாதவூரருக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. அரசியல் பொறுப்புகளிலிருந்து விடுபட்டுச் செல்ல இறைவன் தந்த வாய்ப்பாக அது அமைந்தது. அவர் படைவீரர் ஆரவாரிப்பினிடையே ஏறிப் புறப்பட்டார்.

திருப்பெருந்துறை எனும் திருத்தலத்தை அடைந்தார். அங்கே சிவாலயத்துக்குச் சென்று வணங்கிவிட்டுக் கோயிலை வலம் வந்தார். அவருக்கு முன்பாகவே இறைவன் அவரை ஆட்கொண்டு அருளக் காத்திருந்தார். எங்ஙனம்? அந்தணர் குலம் கண்ட குருவின் வடிவில் பூங்கொத்துக்கள் நெருங்கிய குருந்த மரத்தடியில் அமர்ந்திருந்தார். சுற்றிலும் மாணவர் பாடம் கேட்டிருந்தனர்.

---

★ வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் இயற்கையின் நியதி. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதவூரர் தொலைவிலேயே இக்காட்சியைக் கண்டார். நெஞ்சில் இன்பமழையாய்க் களிப்பு பொங்க, 'நெருப்பிலிடு வெண்ணெயென' உருகி நின்றார். விழிகள் பனித்தன. இத்தனை நாளாகத் தாம் தேடி நின்ற ஆசானைக் கண்டுகொண்ட ஆனந்தத்தில், 'தாய்ப் பசுவைக் கண்ட சேய்க்கன்றென' ஓடோடிச் சென்று இறைவன் பாதங்களில் வீழ்ந்து தொழுதார். ஆண்டவனும் அவரை வாரியெடுத்து அமரச்செய்து திருவைந்தெழுத்தை அவருக்கு ஓதியருளினார். வாதவூரர் கண்களில் நீர் மல்க இறையருட் திறத்தைத் தீந்தமிழில் பாடித் துதிக்கலானார்.

அவரது பாவின் இனிமையில் தோய்ந்த இறைவனே, 'சொல்லரிய பலவினைப் பூரண அன்பாம் ஊடத்தில் கோத்துப் பாமாலையாக்கி அழுது அழுது சாத்தும்' அம்மெய்யன்பருக்கு 'மாணிக்கவாசகர்' எனப் பெயரிட்டார். வாதவூரர், மாணிக்கவாசகரானார். பின் மணிவாசகர் பாடியவை - அதுவே ஒரு வாசகத்துக்கும் உருகாத கல்மனத்தையும் உருக்கவல்ல 'திருவாசகம் எனும் தேன்', அது ஒரு பக்திப் பரவச அமுதக் கலசம். சிவபெருமானே அந்தணராக வந்து திருவாசகத்தை ஏட்டில் எழுதி இவ்வுலகிற்குக் கிடைக்கச் செய்தான். நூலின் அருமைக்கும் பெருமைக்கும் அது ஒன்றே நல்ல சான்றாகும்! "நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க! இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!......" என்று தமது உள்ளத்தை, உணர்வை, அறிவை, நினைவை முழுமையாகப் பற்றிக்கொண்ட நாவின் ஐந்தெழுத்தை முதலாகக் கொண்ட சிவபுராணத்துடன் தொடங்குகிறது, திருவாசகம்.

'இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வையுங்கள்; அவன் ஓடோடி வருவான்' என்பர் சான்றோர். அன்பால் தன்னை நினைந்த மாத்திரத்தில் அடியாரது உள்ளத் தாமரை மலரில் அவர் எண்ணிய வடிவில் விரைந்து வந்து அமரும் பண்பினன், இறைவன் என்பதைத் திருவள்ளுவரும் "மலர்மிசை ஏகினான்," என்ற அடைமொழியின் உணர்த்தக் காண்கிறோம். இந்த எளிமைக் குணமே, அடியவர்க்கு அருள் செய்யத் துடிக்கும் இறையன்பே திருவாசகத்தின் அடிநாதமாக விளங்குகிறது.

வாசகருக்கு உரியத் திருவருள் புரிந்ததோடு ஆண்டவன் நிற்கவில்லை. பாண்டியனும் இப்பாரில் உள்ளோரும் மெய்யன்பரான மாணிக்கவாசகரின் பெருமையை உணரப் பல திருவிளையாடல்களையும் புரிந்தார். அவற்றுள் ஒன்று காட்டுநரிகளைக் குதிரைகளாக்கிப் பாண்டியனிடம் கொணர்ந்து வழங்கியதாகும்.

ஆனால் இரவில் அப்பரிகளெல்லாம் மீண்டும் நரிகளாகி ஊரெல்லாம் நாசம் விளைவித்தன. அரிமர்த்தனன் வெகுண்டு வாசகரைத் தண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்க முற்பட்டான். "கல்லாக் கடையேனை ஆட்கொண்ட பித்தனேயோ?" என்று அழைத்தார் மணிவாசகர். உடனே வைகைநதியில் பெரு வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தான் ஈசன்.

தமக்கு முன்னர் தம்மைப் போன்ற சிவனடியார்க்காகவும் ஏனைய உயிரினங்களுக்காகவும் சிவபெருமான் தாயாய், தந்தையாய், தோழனாய், தொண்டருக்குத் தொண்டனாய், பல்வேறு வடிவங்களில் வந்து அருள் புரிய ஆடிய திருவிளையாடல்களையெல்லாம் வாசகப் பெருமான் பாடிப்போற்றுகிறார். அவற்றின் மூலம் அவர் வலியுறுத்த விளைவதும் உண்மை என்ன? "வேண்டத் தக்கது அறிவோய் நீ வேண்ட முழுவதும் தருவாய் நீ" என்றபடி நாம் பெறத்தக்கதை அறிந்து வழங்கும் அருளாளனே சிவபெருமான். அவன் தன்னை அன்போடு நினைப்பவர்க்கெல்லாம் அருளை வாரி வழங்கக் காத்திருக்கிறான். எனவே, உலக ஆசாபாசங்களாகிய கவலைகளுக்குள் சிக்கலாகாது; இறைவன் திருவடித் தாமரைகளை மனத்தில் கொண்டு அவனது நெறியில் நிற்பதே மானிடப்பிறவியின் பயன் என்கிறார் வாசகப் பெருமான்.

தொகுப்பு:

சந்நிதியான் ஆச்சிரமம்

## வலம்புரிச் சங்கின் சிறப்பு

வலம்புரிச் சங்கு வைத்திருக்கும் வீட்டில் வற்றாத செல்வம் வந்துசேரும். ஏனெனில் வலம்புரிச் சங்கில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள் என்பது பெரியோர்களின் கருத்தாகும். அதனால் அனைத்துச் செல்வங்களும் வலம்புரிச் சங்குள்ள இடத்தில் நீங்காமல் நிறைந்து வளரும்.

ஐஸ்வர்யங்களை அள்ளி வழங்க வல்ல வலம்புரிச் சங்கு கிடைப்பது அரிது. ஆயிரத்தில் ஒன்றுதான் மேன்மை மகோன்னதம் இது வலம்புரிச் சங்கிற்கு உண்டு.

மிகவும் சிறந்த மனிதன் அன்புள்ளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சர்வம் சிவமயம்

# விபூதியின் மகத்துவம்

ஒவ்வொரு சமயத்திற்கும் சமயக்குறிகள் இருக்கின்றன. சமயக் குறிகள் அருவமாயுள்ள கடவுளை அறிவுறுத்தி உணர்த்துவன. சைவசமயிகளுக்குரிய சிவசின்னங்களாக விபூதியும் உருத்திராக்கமும் விளங்குகின்றன. யாகங்கள் செய்கின்றபோது ஸ்மார்த்தர்களும் மற்றுவர்களும் ஹோமத்திலிருந்து எடுக்கப்பட்ட பஸ்மத்தை அணிகின்றனர். விபூதியை குழைத்து திரிபுண்டரமாக - முக்குறியாக இட்டுக்கொள்வதற்கு வேதங்களிலே மந்திரங்கள் உள்ளவாறு கூறப்பட்டுள்ளன. வைஷ்ணவர்களும் பஞ்சராத்ர தீட்சையின்போது ஹோமபஸ்மத்தை இட்டுக்கொள்கின்றனர். இவ்விதம் நோக்கும்போது வேதசம்மதமுடையது எனக் கொள்ளப்படுகின்றது.

"பரமசிவனமலன் பக்தர்க்குச் சின்னம் உருவுடையில் கண்டிகையும் நீறும்" என சைவசமயநெறி செப்புகின்றது. சிவபெருமானிடம் மெய்யன்புடையவர்கள் சிவசின்னங்களைத் தவறாமல் அணிதல் வேண்டும். சிவசின்னங்களை அணிவதனால் நாம் உள்ளும் புறமும் தூய்மை அடைகிறோம்.

மந்திரமாய், தந்திரமாய், சுந்தரமாய், ஞானந்தருவதாய், பூச இனிதாய், நோய்களைத் தீர்ப்பதாய் விளங்கும் விபூதியின் மகத்துவத்தை வேதத்திலுள்ள பாடலினை தமிழ்மறையில் சமயகுரவர்கள் இனிது விளக்கிப் போற்றிப் பாடியுள்ளார்கள்.

"ஸ்ரீகரம்ச பவித்ரம்ச ரோக சோக நிவாரணம்
லோகே வசீகரம் புண்யம் பஸ்மத்ரைலோக்ய சாதனம்"

தூய்மையானதும் மங்களத்தைச் செய்யக்கூடியதும் நோய்களையும் துக்கங்களையும் போக்கடிக்கக்கூடியதும் மேலானதும் மூவுலகத்திற்கும் சாதனமானதும் எல்லா உலகங்களையும் வசீகரிக்கக்கூடியதுமான விபூதி என விபூதியின் பெருமையை மேற்குறிப்பிட்ட பாடலும் விளக்குகிறது.

குருவின் பேச்சிலிருந்து உண்மையை அறியலாம்.

விபூதி, திருநீறு, பசிதம், பஸ்மம், சாரம், என பல பெயர் கொண்டு அழைக்கப்படும். இவ்விதம் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படும் விபூதி, கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம், என நான்கு வகைப்படும் விபூதி தரிக்கும் முறையானது உத்தூளனம், திரிபுண்டரம் என இரு வகைப்படும். மூன்று விரல்களால் பூசும் முக்குறிகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி ஞானம் பெற்றமைக்கு அறிகுறியாகும்.

“நீறு யாவும் பசுமலத்தை நீக்கி ஒரு நற்குறிகாட்டி நிற்பது திருவெண் ‘நீறு’” என சிதம்பர சுவாமிகள் செப்புகிறார். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சிவஞானமெனும் நெருப்பால் சுட்டெரித்து புனித வெண்மையை ஆன்மா அடைவதே மானிட வாழ்க்கையின் முடிந்த பெரும்பயன் என்பதனை இது நினைவூட்டுகின்றது. “பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்” என சேக்கிழார் விபூதி அணிபவர்களைப் போற்றிக் கூறியுள்ளார். “மந்திரம் நமச்சிவாயவாக நீறணியப் பெற்றால் வெந்துயரும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே” என அப்பர் சுவாமிகளும் நீறணிவதால் ஏற்படும் நன்மை பற்றிக் கூறியுள்ளார். “நீறில்லா நெற்றிபாழ்” என தமிழ் மூதாட்டியும் கூறியுள்ளமை நோக்கத்தக்கது. மண்ணிலே பிறந்து மண்ணாவதைக் குறிப்பதாகவும் இது அமைகின்றது. பட்டினத்தடிகளாரும் முடிசார்ந்த வாழ்வினை நினைப்பதல்லால் பொன்னம்பலவன் அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றறிவாரில்லையே என வினவுவதும் நோக்கத்தக்கது.

குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பதுபோல மலைபோல் குவிந்துகிடக்கும் நம் வினைச்சுமையானது துளியாய் நாம் அணியும் நீறு மட்டும் அதனைப் பொடியாக்கப் போகாது என்று சிவபிரான் நம்மீது கொண்ட பெருங்கருணையினால் திருநீறு நிறையத் தம் உடலெங்கும் பூசுகிறார் என சிவபிரானின் பெருங்கருணைத்திறன் இயம்பப்படுகின்றது. பக்தர் வினையைப் போக்க திருநீறு அணியும் சிவபிரான் எனவும் வினைவயம் நீறெழ நீறணி அம்பலவன் எனவும் திருச்சிற்றம்பலக் கோவையார் கூறுவதும் நோக்கத்தக்கதாகும்.

காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன் என்று கூறியதற்கு ஒப்ப காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் அர்த்தஜாமப் பூசைக்கு முன்பாக சுடலைப்பொடியினை இறைவனுக்கு சாத்தும் வழக்கம் இன்றும் நிகழ்ந்து வருவதனை நாம் காணலாம்.

இவ்விதம் எல்லாச் சிறப்புக்களும் பொருந்திய விபூதியை அணிந்து சமய வாழ்வினை கைக்கொண்டு மேன்மையடைவோமாக.

“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

சமூகமணி சி. கி. வரதராசா

★ கடமையைச் செய்வதே பெரும் புகழுக்கு வழி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதத்தின் மகிமை

எமது உடல் நோயையும் உள்ளத்து நோயையும் தீர்க்கக்கூடிய வல்லமை உள்ளவன் இறைவனே. இதனை நன்கு உணர்ந்து இறைவன் அருளைப் பெறுவதற்காக பலவிரதங்கள் அநுஷ்டித்து அந்த விரதங்கள் மூலம் தமது துன்பங்களைப் போக்கியவர்களில் பாம்பன் சுவாமிகள் உயர்வான இடத்தைப்பெறுகின்றார். ஒருமுறை பாம்பன் சுவாமிகளினு டைய முறிந்த கால் எலும்பை குணப்படுத்துவதற்காக வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டார். அங்கே அவருடைய முறிந்த கால் எலும்பு குணப் பட வேண்டுமானால் அவர் அதுவரை உப்பில்லாமல் உணவு அருந்தும் விரத நிலையை மாற்றி உணவில் உப்பை சேர்த்துக்கொள்ள வேண்டும் என வைத்தியர்கள் ஆலோசனை கூறினர். ஆனால் பாம்பன் சுவாமிகள் தனது உயிர் போனாலும் அந்த விரத நிலையைக் கைவிடப் போவ தில்லை எனக்கூறி அந்த ஆலோசனையை ஏற்கமறுத்துவிட்டார்.

நான் விரதமிருந்து தினமும் வணங்குகின்ற முருகப்பெருமானு டைய கருணையை விடவா தனது நோயைக் குணப்படுத்தக்கூடிய ஆற் றல் இந்த உப்புக்கு உண்டா என தனது மனதிற்குள் நினைத்துச் சிரித் துக்கொண்ட சுவாமிகள் முருகப்பெருமானை நினைந்து உள்ளம் உருகிப் பாடிய 30 பாடல்களே சண்முககவசமாகும். இந்த முப்பது பாடல்க ளையும் பாடிமுடித்தபின் சுவாமிகள் தன்னை மறந்து நித்திரை செய் தார்கள். அடுத்தநாள் காலையில் குணப்படுத்த முடியாது என வைத்தி யர்கள் கருதிய நோய் குணப்பட்டதுமட்டுமன்றி வைத்தியர்கள் அதிச யப்பட்டு அவரை வணங்கும் வகையில் அவர் சாதாரண ஆள்போல நட மாடும் ஆற்றலையும் முருகப்பெருமான் அவருக்கு வழங்கி அருளினார்.

கந்தசஷ்டிகால சிறப்புச் சொற்பொழிவில்
ஆசிரியர் செவநாதன் அவர்கள்

அளவுக்கு மீறிய செல்வமும் ஆபத்தானது அளவுக்கு மீறிய வறுமையும் ஆபத்தானது. இரண்டுமே மனிதர்களை ஒழுக்கங் கெட்டவர்களாக மாற்றிவிடும்.

பெருமை என்பது பட்டங்கள் உடைமை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசர் கூறும் ஐந்து உண்மைகள்

சிவபிரானை வேண்டுவதாயும் தன் குறைகளைத் தெரிவிப்பதாயும் அமைந்தவை போலவே மனிதர்க்கு அறிவுறுத்துவதாயும் தனது அநுபவ உண்மைகளை எடுத்துக் கூறுவதாயும் கூட திருநாவுக்கரசரின் பல தேவாரங்கள் விளங்குகின்றன.

வேதங்களின் சிறப்பைக் கூறும்போது நமது வாழ்வின் அநுபவத்தாலும் நமது விவேகத்தின் அநுமானத்தாலும் அறிய இயலாத உண்மைகளைக் கூறுவது வேதம் என்பர். இந்த அடிப்படையில் நமது அநுபவத்தாலும் விவேகத்தாலும் அறிய இயலாத பல உண்மைகளை திருநாவுக்கரசர் திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில் எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தின் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இத் திருத்தாண்டகத்தின் மூலம் ஐந்து உண்மைகளை நாவுக்கரசர் கூறியுள்ளார். ஐந்தில் முதலாவதாக உள்ளது சிவபெருமானின் திருநாமமாம் அஞ்செழுத்தை செப்புதல் - கூறுதல் வேண்டும் என்கிறார்.

மனிதன் நாவினால் தீமைகளை அதிகம் செய்கிறான். புறங்கூறுதல், பொய்கூறுதல், கோள்கூறுதல், வீண்வார்த்தை கூறுதல், தற்பெருமை கூறுதல் முதலியனவாக நாவினால் செய்யும் தீமைகளை நாவினால் நீக்கவேண்டும் என்பதற்காகவே முதலாவதாக நாவினால் செய்ய வேண்டிய நாமம் கூறுதலை திருநாவுக்கரசர் முதலாவதாகக் கூறியுள்ளார் போலும்.

தீவண்ணர் திறமொருகால் பேசல் அடுத்த விடயமாகும். நாமம் செப்பல் தனித்த முயற்சி. தீவண்ணர் திறமொருகால் பேசல் என்பது இரண்டாமவருடனோ - பிறர் பலருடனோ தொடர்புபடும் செயலாகும். அத்துடன் தன் இரசனை அல்லது தன் அநுபவம் பற்றி கூறுவதுமாகும். இச்செயலால் தானும் பிறரும் பயனடைதல் சிவசம்பந்தமுறுதல் சைவசமயியாதல் உறுதியாகும். தீவண்ணர் திறம் ஒருகால் பேசல் என்பதிலும் ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில் என்பதிலும் ஒருகால் - என்ற சொல்லாட்சி இடம்பெறுகிறது. இது பலகால் - பலதடவை நிகழவேண்டும் என்பதை குறிக்கின்றது. சொந்தமாக - புதுமையாக ஒரு அநுபவம் அடைந்தவர் அது நோயாயிருக்கலாம். அல்லது வெளியூர்ப் பயணமாயிருக்கலாம் -

மனிதன்தான் மனிதனுடைய காவல்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் அநுபவத்தைப் பலவிடமும் திரும்பத் திரும்பக் கூறுதலில் களிப்படைபவராக மட்டுமன்றி ஊக்கமுறுத்தும் கூட வழமை. இத்தன்மை சிவபெருமானின் அருளியல்புதனைக் கூறுதலில் இடம்பெற வேண்டும் என்னவே அப்படியான தூய தெய்வீக வாழ்க்கையும் வலியுறுத்தப்பட்டதாகின்றது.

ஒருகாலும் திருக்கோயில் சூழல் என்பது மூன்றாவது விடயமாகும். நம்மில் பலர் வலம் வருதலை அரும் செயலாக மதிப்பதில்லை.

பண்ணினேர் மொழியாள் எனத்தொடங்கும் தேவாரத்தில் மண்ணினோர் வலம் செய் மறைக்காடரோ என்கிறார் திருநாவுக்கரசர். இதே பதிகத்தில் விண்ணினார் விரும்பி எதிர் கொள்ளவே மண்ணினோர் வலம் செய் மறைக்காடரோ என்றும் குறிப்பிடுவர். ஆலயவழிபாட்டு முறை பற்றிக் குறிப்பிடும் நாவலர் பெருமானும் இரண்டாம் சைவ வினாவிடை 325ம் வினாவுக்கு விடை எழுதும் போது " ..... மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் ஏழு தரமாயினும் ஒன்பது தரமாயினும் பதினைந்து தரமாயினும் இருபத்தொரு தரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணி மீண்டும் சன்னிதானத்திலே நமஸ்காரம் பண்ணல் வேண்டும்" என்கிறார்.

தினமும் ஆறுகாலப்பூசை நடைபெறும் ஆலய ஒழுங்கிற்கு ஏற்ப அதிகாலை, காலை, நண்பகல், முன்மாலை, மாலை, இரவு என ஆறு முறை வலம்வர வேண்டும். இல்லையேல் காலை, நண்பகல், மாலை என மூன்று தடவையாவது நாளொன்றுக்கு வலம் வருதல் அவசியம். மூன்று முறை சாப்பிடுபவர் மூன்றுமுறை வலம் வருதல் நியாயம்தானே.

சிவதரிசன மகத்துவம் என்னும் நூலின் உள்ளே பின்வரும் செய்யுள் காலை - நண்பகல் - மாலை என மூன்று வேளையும் வணங்குதலால் கிடைக்கும் பயனை விசேடமாகக் குறிப்பிடுகின்றது.

(தொடரும் ...

தி. பொன்னம்பலவாணர்

உன் எண்ணங்களில் அவநம்பிக்கை வராத வகையில் கூடிய தடை போடு. நம்பிக்கையுள்ளவனாக உன்னை மாற்றிக்கொள்.

தனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்றும், தெரியாததைத் தெரியாது என்றும் கூறுவது எதுவோ, அதுவே அறிவாகும்.

அறிவு அச்சத்தை முறிக்கும் மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி)

உ

ஓம் நமசிவாய

# குரு வழிபாடு

இது மட்டுமன்றி தீட்சை வழங்குவதில் குரு மிக இன்றியமையாதவர். குருவினுடைய பார்வையால் இடுவது ஆணவ மலம் கெடுதல் நயனதீட்சையாகும். இவ்வாறு பலவகைத் தீட்சையால் ஞானத்தைக் கொடுத்து பாசத்தைக் கெடுத்து ஆன்மாவை முத்தியடையச் செய்பவர் குருவேயாவர். மேலும் ஒருவன் ஞானமடைய வேண்டுமெனினும் குரு இன்றியமையாதவராகவே காணப்படுகிறார். குரு இன்றி ஆன்மாவுக்குப் பதிஞானம் தோன்ற மாட்டாது என்ற கருத்தை

" ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கலனால்
பானு வொழியப் படின் "

என உமாபதி சிவாச்சாரியார் தனது திருவருட் பயனில் கூறுகிறார்.

முன்னைய நல்வினைப்பயன் வாய்க்கப்பெற்று வாழ்ந்து செல்வர் சிவபுரத்தின் உள்ளார். சிவனடிக்கீழ் முத்தியின்பத்தை அநுபவிக்க வேண்டுமெனின் நல்ல குருவைத்தேடிப் பிடிக்கவேண்டியது நமது கடமை. குருவானவர் ஞானக்கண் திறந்தவராக இருக்கவேண்டும் அல்லாவிடில் குருட்டாட்டமாடி படுகுழிக்குள் விழவேண்டிய ஆபத்துநிலை நமக்கு நேரிடும் என்பதை பின்வரும் திருமந்திரம் தெளிவுபடுத்துகின்றது.

" குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்ட மாடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறு "

எனவே நல்ல குருவைப் பெற குருடராகிய நம்மால் முடியாது என்றால் யாது செய்வது? ஒவ்வோர் ஆலயமாகச் சென்று புனித தீர்த்தத்தில் நீராடி அங்குள்ள மூர்த்தியை முறைப்படி வழிபாடு செய்தோமேயானால் நல்லகுரு வந்து நமக்கு முன்னே அறிவுரை கூற வாய்ப்பர் என்பதை பின்வரும் தாயுமான சுவாமிகளின் பராபரக்கண்ணி கூறி நிற்கின்றது.

தந்தையையும் தாயையும் பிரியத்துடன் காப்பாற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

இவ்வாறு நல்ல குருவைக்கண்டதும் அவரது திருநாமங்களைச் செப்பி குருவினது திருவார்த்தையைக் கேட்டுச் சிந்திப்பதன் வாயிலாக தெளிந்து நிஷ்டை கூடியிருக்கலாம் என்கிறார் திருமூலர்.

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. "

இதையடிப்படையிலேயே இன்றும் சிவாச்சாரியார்கள் கிரியைகளை ஆரம்பிக்குமுன்பு "ஓம் குருப்யோ நம" என குருவை வணங்கிவிட்டு தொடங்குவதையும் நித்திய பூஜையிலே குருவை வணங்கி சந்தியா வந்தனங்களை மேற்கொள்வதும் சிவாலய வழிபாட்டில் மகோற்சவ காலத்தில் சிவோகம் பாவனையால் குருதன்னைச் சிவனாகப் பாவனை செய்து கிரியைகளை ஆற்றுவதால் கொடியிறக்கத்திலன்று சிவாச்சாரிய உற்சவம் எனும்பெயரில் குருவழிபாடு செய்து மகோற்சவபலனைப் பெற்றுக் கொள்வதும் திருநீறு தருகின்ற குருவை வணங்கிவிட்டு திருநீற்றைப் பெறுவதும் சிந்திக்கத்தக்கது. ஸ்ரீகுருவின் பாத சேவையால் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டுப் பரிசுத்தனாகின்றான். குருபாத தீர்த்தம், குருமூர்த்தியைத் தியானம் செய்தல், குருநாமத்தை செபம் செய்தல் குருநாம கீர்த்தனம், குருநாம சிந்தனை என்பன ஒருவனுடைய அஞ்ஞான இருளை நீக்கும் சாதனங்களாகும். இவற்றோடு தேவார திருவாசகங்களைத் தந்த சமயகுரவர்களையும் மெய்கண்ட சாஸ்திரங்களைத் தந்த சந்தானாச்சாரியார்களையும் குருபூசை செய்து வழிபடுதல் புண்ணியமாம்.

இவ்வாறு குருவை வழிபட்டு பெரியபுராண நாயன்மார்கள் பதினொருவர் முத்தியடைந்துள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| திருஞானசம்பந்தர் | சோமாசிமாறர் |
| திருநாவுக்கரசர் | குலச்சிறையார் |
| மங்கையர்க்கரசியார் | அப்பூதியடிகள் |
| பெருமிழலைக் குறும்பர் | கணநாதர் |
| நின்றசீர் நெடுமாறன் | திருமூலர் |
| திருநீலகண்ட யாழ்ப்பாணர் | |

நல்லோர் உள்ளம் நல்லோர் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்திலும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், சிவானந்தர், இரமணமகரிஷி, ஸ்ரீ அரவிந்தர் போன்றோர் மட்டுமன்றி ஆதீனகர்த்தாக்கள் ஸ்ரீ சத்யசாயிபாபா போன்றோரும் குருவாக நின்று மனிதசமுதாயம் மேம்பாடடைய உழைத்தவர்களாவர். எனவே குருவாகிய தெய்வத்தை நாமெல்லாம் ஏற்றியும் போற்றியும் வழிபாடு செய்ய வேண்டியது மிகமுக்கிய கடமை மட்டுமன்றி நம் ஆன்மிக ஈடேற்றத்திற்கும் உதவும் என்றால் மிகையாகாது.

ஓம் ஸ்ரீ குருப்யோ நம!

குருபாதம் வாழ்க!

செ. கந்த சத்தியதாசன் B. A. (Hons)

## இரண்டு பணக்காரர்கள்

ஒரு நகரத்தில் வெறிநாய்களின் தொல்லை அதிகமாக இருந்தது. இரண்டு பணக்காரர்கள் வெறிநாயினால் கடிக்கப்பட்டு படுத்த படுக்கையில் இருந்தனர். சாகும் தருவாயில் அவர்கள் உயில் எழுத விரும்பினர். அவர்களுக்குக் குழந்தைப்பேறும் இல்லை.

ஒரு பணக்காரர் தனது உயிலில், " வெறிநாய் கடிப்பதால் மிகுந்த அபாயம் ஏற்படுகிறது. ஆகவே என் சொத்து முழுவதையும் அனைத்து வெறிநாய்களையும் பிடித்துக் கொன்று விடுவதற்கு உபயோகிக்க வேண்டும். " என்று குறிப்பிட்டார்.

மற்றொரு பணக்காரன்: " வெறிநாய் கடியால் பாதிக்கப்படும் மக்களைக் காப்பாற்ற மருந்து கண்டுபிடிக்க, ஆராய்ச்சி செய்வதற்கு, என் சொத்து முழுவதையும் பயன்படுத்த வேண்டும் " என்று உயில் எழுதினான்.

முதல் பணக்காரரின் செயல் நல்லதாக இருந்தாலும் பாவம் நிறைந்தது. இரண்டாவது பணக்காரரின் நற்செயல் சீர்மை பொருந்தியது.

ஆகவே இரண்டாவது பணக்காரரே முதலாமவரைவிட சிறந்தவர்.

நல்லதே எண்ணுக நல்லதே பேசுக நல்லதே செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 22

The following poem is Compased to impress in mind of basic English grammar, இதை ஆசிரியர்களின் உதவியுடன் ஆதி தாளத்தில் பாடலாம். இலகுவாகப் பாடுவதாயின் ஏக தாளத்தில் பாட முடியும்.

I, we, you, they, He, she, it |
are the pronouns | |
Pronouns are used |
instead of nouns. | |

Who, whose, whom are the |
Qustioning words for persons | |
when for the time |
where for the place | |
which or that indicate |
Things in universe. | |

On, over, under, below, |
Since, for, between, among | |
about, by, in, at, from |
before, to, prepositions. | |

S, es, i es |
added to verbs in sentences | |
show the nouns singular |
happenings are usual | |

S. Thurairajah
( English Tutor )

தொல்லை கொடுக்கும் உறுப்பு நாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத வாராந்த நிகழ்வுகள்

**03-12-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. க. சிவக்கொழுந்து, J. P. ( உடுப்பிட்டி )
**சொற்பொழிவு: 'வாக்கும் வாழ்வும்'**
வழங்குபவர் : சைவப்புலவர் சு. செல்லத்துரை
(இளைப்பாறிய அதிபர், மெய்கண்டான் மகா-வித் இளவாலை)

---

**10-12-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
( பிரதி அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை )
**சொற்பொழிவு: 'நாமேல் நடவீர்'**
வழங்குபவர் : செல்வன் S. லலீசன்
( பலாலி, ஆசிரிய பயிற்சிக்கலாசாலை )

---

**17-12-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. க. செல்வரெட்ணம், J. P. ( அச்சுவேலி)
**சொற்பொழிவு: 'உறுபொருள் கண்டேன்'**
வழங்குபவர்: சிவானந்தவாரிதி வ. குமாரசாமிஐயர்
( நூலகர், காங்கேசந்துறை )

---

**24-12-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
ஆசியுரை : சுவாமி சித்ரூபானந்தா ( ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் )
**விடயம்: 'முருக நாம பஜனை'**
வழங்குபவர்கள்: முருகனடியார்கள் ( பக்கவாத்திய சகிதம்)

---

**31-12-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# மார்கழி - 1999

வெளியீட்டுரை: சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர், J. P.
( பிரதமகுரு, வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் )
மதிப்புரை: பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஸ்ணஐயர்
( தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ் / பல்கலைக்கழகம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி நடைபெறுகிறது

### - 1999 -

ஞானச்சுடர் ( தை தொடக்கம் ஐப்பசி ) வரையிலான மலர்களில் பிரசுரிக்கப்பெற்ற விடயங்களில் வாசகர்களின் ஆர்வத்தினைப் பரீட்சிப்பதற்கான வினாக் கொத்து இம் மலரில் தரப்பட்டுள்ளது. வினாக்களுக் கான விடையினை 05 - 01 - 2000 ஆம் திகதிக்குமுன் சந்நிதியான் ஆச்சிரம முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

போட்டியில் வெற்றியீட்டுவோர்க்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org